Registered No. M-4433. Madras War Review (TAMIL) 28-7-1944

யுத்த சஞ்சிகை

மலர் IV 1944-ம் ஸு ஜூலை மீ 28உ, வெள்ளிக்கிழமை இதழ் 47

V...—

தெளிவான அறிகுறிகள்

உள்ள நிலைமையை, அனுபவமிக்க ஜெர்மன் படைத் தலைவர்கள் தெளிவாக உணர்ந்து கொண்டார்களென்று 'ரெய்ச்' சபையில் நடைபெறும் சம்பவங்களிலிருந்து தெரிகிறது.

ஜெர்மானியருக்கு ஆதிக்கத்தின் மீதுள்ள பேராசையின் சின்னமாக விளங்குகிறார் ஹிட்லர். இந்தச் சின்னம் அழியுமானால், அது தோன்றுவதற்குக் காரணமா யிருந்த உணர்ச்சியும் அடியோடு அழியும். இந்த முறை அது கட்டாயம் அடியோடு நொறுக்கப் படவேண்டும். அது மீண்டும் தலை தூக்கக் கூடாது. அந்த ஜெர்மன் யுத்தத் தலைவர்களைக் கொண்ட கோர்வையில், ஹிட்லரும் ஒருவர். இந்தத் தரம் கண்டிப்பாக இந்தக் கோர்வையைச் சின்னா பின்னப்படுத்தி விட வேண்டும். எவ்வளவு கடுமையாகத் தண்டித்தாலும், என்ன தான் பூரணமாகப் பழிக்குப் பழி வாங்கினாலும், என்ன தான் நிபந்தனை யில்லாமல் சரண் புகுந்தாலும், ஜெர்மனி, ஜப்பான் என்னும் இரண்டு பிணந் தின்னிக் கழுகுகளும் எதிர் காலத்தில் செய்யக் கூடிய அக்கிரமங்களால் ஆபத்துக்கள் ஏற்படவே மாட்டா என்று கூறி விடுவதற்கில்லை.

மிஸ்டர் ஆன்டனி ஈடன்,
லண்டனில் ஜூலை மாதம் 24-ம் தேதி கூறியது.

மிஸ்டர் ஆன்டனி ஈடன்.

பொருளடக்கம்.

	பக்கம்.
முகப்புப் படம் : மிஸ்டர் ஆன்டனி ஈடன் ..	1
தெளிவான அறிகுறிகள்	1
முரசொலி	2
தலையங்கம் : ஜெர்மன் படைத் தலைவர் ரன்ஸ்டெட்.	3
போர்முனை நிகழ்ச்சி விளக்கம்	4
எட்டாம் இந்தியப் படை	6
வானொலி நாட் குறிப்புகள்	6
நோட்டுப் பெருக்கமும் சேமிப்பின் அவசியமும் ..	7
எதிர் பார்த்து	9
யுத்த காலத்தில் அரசாங்க உதவி	10
யுத்த நாட் குறிப்புக்கள்	12

முரசொலி

'விமானப் படை உத்தியோகஸ்தர்களே! மற்றோர்களே! நீங்கள் இது வரை செய்த, இனியும் செய்யப் போகிற மிகச் சிறந்த வேலை பற்றி உங்கள் மீது குறை கூறவும் ஊக்குவிக்கவும் சில வார்த்தைகள் கூற இந்தச் சந்தர்ப்பத்தை மேற்கொள்ளுவது பற்றி நான் மகிழ்ச்சி யடைகிறேன். இந்த பிரிட்டிஷார் முயற்சியும், நமது தலை சிறந்த தோழர்களான அமெரிக்கர்கள் முயற்சியும் சேர்ந்து, யுத்த சரித்திரத்திலேயே ஒப்புயர் வில்லாத தோர் நிலைமை ஏற்படுத்தி விட்டது. இந்த யுத்த ஆரம்ப காலத்தில் 2 அல்லது 3 டிவிஷன் படைகளைக் கரை சேர்க்க 5 அல்லது 6 வாரங்கள் பிடித்தன. இப்போது இங்கே ஏராளமான படைக ளிருக்கின்றன. எத்தனை டிவிஷன் படைக ளிருக்கின்றன வென்று நான் சொல்ல மாட்டேன். ஏராளமான படைகள் என்றபோதே நீங்கள் தெரிந்து கொள்ளுங்கள். இவை இங்கே எப்படி வந்து சேர்ந்தன என்பது பற்றி, நான் பெரிதும் ஆச்சரியபபடுகிறேன். இத்தனைப் படைகளும எதிரி தாக்கிக் கொண்டிருக்கும் போது தான், கொண்டு வரப்பட்டன.

இந்த மாபெரும் தாக்குதல் போராட்டத்தில் நேச நாட்டு விமானப் படைகள் தான் பெரும் பங்கு கொண்டன. கரை யோரங்களி லிருந்த பாதுகாப்பு அரண்களை யெல்லாம் வெட்டி நாசப் படுத்தி விட்டார்கள். இதனால் கப்பற் படையை உபயோகிக்க வேண்டிய அவசிய மில்லாது போயிற்று. கரையி லிருந்த அரண்களை நம் விமானங்கள் விஞ்ஞான முறைப்படி தாக்காது போயிருந்தால், கப்பல்களைத் தான் பயன் படுத்தும்படி யிருந்திருக்கும் அப்போது ஏராளமான செலவாகும். வியானிகளே! நீங்கள் மிகச் சிறந்த முறையில் போராடினீர்கள். 1940-ம் வருஷம் மிகக்கொஞ்சம் விமானங்கள் தான் இருந்தன. விமானிகளின் எண்ணிக்கையும் மிகக் கொஞ்சம். அப்போது நம்மிடம் 100 பீரங்கிகளும், 20 டாங்கிகளும் தான் இங்கிலாந்தி லிருந்தன வென்று நினைக்கிறேன். தாம் இங்கிலாந்தைத் தாக்கு முன்னதாக, பிரிட்டிஷ் விமானப் படையை நிர்மூலமாக்கி விட வேண்டு மென்று எதிரிகள் எண்ணினர்கள். அதன் பிறகு தான் மிகச் சிறந்த பிரிட்டன் யுத்தம் ஆரம்பமானது நம் நாட்டின் ஜீவ நாடி காப்பாற்றப் பட்டது. நாம் முன்னேற முடிந்தது. 20 நாடுகள், அதாவது உலக முழுதுமே நம்மோடு சேர்ந்தது"

—மிஸ்டர் சர்ச்சில், நார்மண்டி போர் முனையில்,
ஜூலை மாதம் 24 ம் தேதி கூறியது.

* * * * *

"நான் இங்கிலாந்தி லிருக்கும் போது கண்டவை பல; கேட்டவை பல. அவை யனைத்தும் ஒவ்வொரு ஆணும் பெண்ணும் எவ்வளவு உறுதி யோடிருக்கிறார்கள் என்பதை எடுத்துக் காட்டுகின்றன. பரிபூரணமான வெற்றியும் நிரந்தரமான சாமாதானமும் அமைய வேண்டும் என்னும் மன உறுதி அவர்களிடம் துலங்குகின்றது. இவற்றின் பொருட்டு எவ்வளவு தியாகங்கள் வேண்டுமானாலும் செய்யத் தயாரா யிருக்கிறார்கள்."

—மேன்மை தங்கிய காஷ்மீர் மகாராஜா, ஸ்ரீநகரில்,
ஜூலை மாதம் 23-ம் தேதி கூறியது.

யுத்த சஞ்சிகை

வார வெளியீடு

மலர் IV | 1944-ம் வருஷம் ஜூலை மீ 28உ வெள்ளிக்கிழமை | இதழ் 47

ஜெர்மன் படைத் தலைவர் ரன்ஸ்டெட்

கெய்ன் நகரம் கைப்பற்றப் பட்டது. அதன் பயனாக ஜெர்மன் படைத் தலைவர்கள் எண்ணத்தில் மண் வீழ்ந்தது. மேற்கு ஐரோப்பாவின் பாதுகாப்பின் நிமித்தம் அவர்கள் வகுத்திருந்த திட்டம் அடிமாண்டு போனது. எப்படி யென்றால், ஜெர்மன் போர்த் தந்திர முறைகளுக் கெல்லாம் கெய்ன் நகரம் ஒரு அச்சாணி போன்றிருந்தது. கெய்ன்-டில்லி பிரதேசத்தில் ஜெர்மன் படைத் தலைவர் பொறுக்கு மணிகளான 7 படைகளைக் கொண்டு வந்து வைத்திருந்தனர். இவற்றுள் 2 படைகள் ருஷ்யப் போர் முனையினின்று சமீபத்தில் தான் மாற்றப் பட்டவை. இங்கே திரட்டி வைக்கப் பட்டிருந்ததைப் போல, பெரும் படைகளையும் ஏராளமான தளவாடங்களையும் இது வரை எந்த இடத்திலும் திரட்டி வைக்கப் பட்டதில்லை. இதனின்று, இந்தப் பகுதி எவ்வளவு முக்கியமான தென்று விளங்குகிறது.

ஓடோனைக் கடந்து நேசப் படைகள் புகுந்த போது, ஜெர்மன் படைகள் மகா கடுமையாகத் தாக்கி எதிர்த்தனர். 4 நாட்களில் 24 முறை தாக்கினார்கள். குறிப்பாக ஜூலை 2-ம் தேதி 9 முறை தாக்கினார்க ளென்றால், அவர்களுடைய மன உறுதியை அது விளக்குகிறதல்லவா? பிரிட்டிஷ் படையினரும் கனடியப் படையினரும் மகா கெட்டிக்காரர்கள்; கொஞ்சமும் தளராத ஆண்மை கொண்டவர்கள்; கல் போன்ற மன உறுதி உடையவர்கள். கெய்னுக்குத் தென் மேற்கே ஒரு காடு. அதை யடுத்து ஒரு வேலி போல் அமைந்திருக்கிறது. இங்கே தான் தம் இறங்கு துறையை நேசப் படையினர் அமைத்துக் கொண்டார்கள். இதைத் தகர்க்க ஜெர்மன் படைகள் அரும்பாடுபட்டன. முடியவில்லை. ஜெனரல் மண்ட்காமரி வகுத்ததோர் திட்டத்தில் இது முக்கியமான தோர் பகுதி.

செர்பூர்க் தீபகற்பத்தின் அடிப் பக்கத்தில், லா ஹே டு புட்ஸ் இருக்கிறது. இது போர் முனையின் வலது பக்கத்தி லுள்ள பலமானதோர் ஜெர்மன் கோட்டை. முதலில் இந்தக் கோட்டையை இரு புறங்களிலும் நேசப் படைகள் வளைந்தன; பிறகு கைப்பற்றிக் கொண்டன. லா ஹேக்குத் தென் கிழக்கே நேசப் படைகள் மேலும் முன்னேறின. சென்ட் லோ பகுதியிலிருந்து ஓடோன் வரையிலும் நேசப் படையினர் வசப்பட்டது. அன்றியும் கெய்னுக்கு வடக்கேயும் நேச நாட்டினர் வசப் பட்டது. இப்படிச் சிறுகச் சிறுக வளைத்து வளைத்து இடம் பிடித்துக் கொண்டு முன்னேறுவதில் ஒரு இலாபம் உண்டு. பெருவாரியான படைகளையும் தளவாடங்களையும் அங்கே கொண்டு வந்து சேர்த்து வைத்துக் கொண்டு தாக்குவதற்கு வசதி யுண்டு.

ஒரு மாபெரும் ஜெர்மன் படைத் தலைவர் தன் பதவியினின்று நீக்கப் பட்டார். இவர் பெயர் பீல்ட் மார்ஷல் வான் ரன்ஸ்டட். இவர் தான் மேற்கு ஐரோப்பியப் போர் முனையில் ஜெர்மன் படைத் தலைவரா யிருந்தவர். இவ்வளவு பெரும் பொறுப்பு வாய்ந்ததோர் பெரும் படைத் தலைவரைப் பதவியினின்று நீக்குவ தென்றால், அதற்குத் தகுந்த காரணம் இருக்கத் தான் செய்யும். நேசப் படைகள் பிரான்சில் காலடி எடுத்து வைக்க முடியாதபடி விரட்டி விட, அவரால் முடியவில்லை என்னும் காரணம் பற்றி அவரை அப்பதவியினின்று நீக்கி யிருக்கவுங் கூடும். ஆனால், இதையே ஒரு காரணமாகக் கொண்டு, தற்போது ஜெர்மனியுள்ள நெருக்கடியான நிலைமையில் ரெய்ச் சபையில் நாஜிக் கட்சியினருக்கு வலுத் தேடிக் கொள்ள, சந்தர்ப்பம் ஏற்படுகிறது.

தன் தளவாடங்களையும் படைகளையும் திரட்டி ஒன்று படுத்தித் தாக்குவதை விட்டு, பிரித்துத் துண்டு துண்டாக அனுப்பி அவற்றை வீணாக்குகிறார் ரோமல் என்று விமர்சகர்கள் கருதுகிறார்கள். அவர் கையாண்ட முறையின் பயனாக, படைகளிலும் போர்த் தளவாடங்களிலும் பாதிக்கு மேல் வீணாக்கப் பட்டு விட்டன; அல்லது அழிக்கப் பட்டு விட்டன. அவரால் வேறு என்னதான் செய்திருக்க முடியும்? பெருந் தாக்குதலுக்கு ஆயத்தம் செய்வதற்கான வசதிகள் அவருக்கில்லை. அதற்கு, போர் முனையில் அவர் தன் நிலைமையை உறுதிப் படுத்திக் கொள்ள வேண்டும். இது கூட அவருடைய காலாட் படைகளால் முடியவில்லை.

பீல்ட் மார்ஷல் வான் ரன்ஸ்டெட் தான் ஜெர்மன் பீல்ட் மார்ஷல்களில் மிகப் பழையவர். இவர் 1910-ம் வருஷம் லெப்டினென்ட் கர்னலானார். பிறகு தன் பதவியை விட்டு விலகினார். 1918 ம் வருஷம் ஜெர்மனி தோற்றுப் போனதற்குக் காரண மென்ன வென்று ஆராய்ந்தார். அந்த ஆராய்ச்சியைப் பற்றிய அறிக்கை யொன்றை வெளியிட்டார். அது போன்ற தெளிவானதோர் அறிக்கை இதுவரை வெளிவந்ததில்லை. 1933-ம் வருஷம் ஹிட்லர் பதவி ஏற்றார். அப்போது தரைப் படைகளைப் பெருக்குவதற்கு ஆவல் கொண்டார். இந்த வேலையை நிறைவேற்ற ரன்ஸ்டெட்டை விட கெட்டிக்காரர் ஒருவர் கிடையாது என்று உணர்ந்தார். 1938-ம் வருஷம் ரெய்ச் சபையைச் சேர்ந்த அநேகர் வெளியேற்றப்பட்டனர். அதன் பிறகு ரன்ஸ்டெட் தன் பதவியை ராஜிநாமாச் செய்தார். ஆனால் இந்த யுத்தத்தில் அவர் மீண்டும் போர்முனையில் சேர வேண்டியதாயிற்று.

இவர் ஒரு நல்ல படைத்தலைவர் என்பது தான் பொதுவான ஜெர்மன் மக்களின் கருத்து. இவர் வான் லீயைப் போல மகா திறமைசாலியா யில்லா திருக்கலாம். என்றாலும், எல்லாத் துறைகளிலும் தலைசிறந்து விளங்குபவர் அவர் தான். நல்ல அறிவாளி; நம்பத் தக்கவர்; அமைதியும் தந்திரமும் கொண்டவர்; எக்காரியத்தையும் நடத்துவிக்கும் திறமையும் மன உறுதியுங் கொண்டவர். போலந்தில் குற்றத்திற்கே இடமில்லாத முறையில் போராடி வான் பாக் படைகளை மீட்டார். பிரான்சில், மத்திய பெல்ஜியம் வழியாகவும் சோமியாற்றின் தென் பகுதி வழியாகவும் சென்று நிர்த்தூளி செய்தார். 60 முதல் 80 டிவிஷன் ஜெர்மன் படைகளுக்குத் தலைவராயிருந்து உக்ரெய்ன் வழியாக முன்னேறிக் கொண்டிருந்தார். பிறகு, மார்ஷல் ஷூகோவின் எதிர்த் தாக்குதலினின்று ஜெர்மன் படைகளை மீட்கும் பொருட்டுத் தருவிக்கப்பட்டார்.

ஜெர்மன் இராணுவத்தைச் சேர்ந்த உயரிய உத்தியோகஸ்தர்களுக்குள் நாஜிக் கட்சியை எதிர்க்கிறவர்களில் இவர் தான் முக்கியமானவர். ஹிட்லரைக் கவிழ்க்க வேண்டுமானால், அவரால் தான் சாத்தியம் என்று பொதுவாகக் கருதப்படுகிறது. அன்றியும், இந்தப் போரில் ஜெர்மனி தோற்றுவிடும் என்னும் முடிவிற்கு 2 வருஷங்களுக்கு முன்னதாகவே அவர் வந்து விட்டாராம். நாஜிகள் மீது அவருக்கு அன்பில்லை. தன் இனத்தானான பிரஷ்ய இராணுவத்தினரை அவர் காப்பாற்ற வேண்டும். பெரும் நாசத்திற்கு உள்ளாக விருந்த படைகளைக் காக்கவேண்டுமென்பது அவரது எண்ணம் போலும். ஆனால், அவரைச் சூழ்ந்திருந்தவர்கள் நாஜிகள். அவர்களுள் ஒருவர் தான் ரோமல். இவர் நாஜி தத்துவத்தில் மூர்க்கமான பற்றுள்ளவர். ரன்ஸ்டெட்டின் நடவடிக்கைகளைக் கண்காணிக்கும் பொருட்டே அவர்கள் நியமிக்கப்பட்டிருக்கவுங் கூடும்.

அப்படியானால், ரன்ஸ்டெட் பதவியினின்று நீக்கப்பட்ட போது, அந்தப் பதவிக்கு, சாதாரணமாக ரோமல் தான் வந்திருக்கவேண்டும். ஆனால், அவருக்கு அந்தப் பதவி கிடைக்கவில்லை. ஏன்? கிடைத்திருந்தால், ஒருக்கால் இராணுவத்தில் பிளவு ஏற்பட்டிருக்கக் கூடும். ஏனென்றால் ரோமல் உயர்ந்த வகுப்பைச் சார்ந்தவரல்ல. அன்றியும் ப்ரஷ்ய இராணுவ வகுப்பினருள் மிகமிக உயரிய இனத்தவரென்று ரன்ஸ்டெட் மதிக்கப்படுகிறார். ஆனால், இவரைப் பதவியினின்று நீக்கியதன் பயனாக, நாஜிக் கட்சிக்கு ரெய்ச் சபையில் செல்வாக்கு அதிகரிக்குமென்பது மட்டும் உறுதி. மேற்கத்தியப் போர்முனைக்கு அனுப்பப்பட்ட படைகளெல்லாம் நாஜிப் படைகள் என்பது இங்கே கவனிக்கத் தக்கது. இந்தப் படைத்தலைவர் ரோமலும் நாஜி தத்துவத்தில் அளவுகடந்த பற்றுதல் கொண்டவர். ஆகவே, மகா மூர்க்கமாகப் போராடுகிறார்கள்.

ஆகவே, ரன்ஸ்டெட் பதவியினின்று நீக்கப்பட்டதனால் (1) மேற்கே போராடும் பொருட்டு ஜெர்மன் படைத் தலைவர்கள் வகுத்திருந்த திட்டங்களெல்லாம் ஆரம்பத்திலேயே அடிமாண்டு போயின; (2) ஜெர்மனியிலுள்ள ரெய்ச் சபையில் நாஜிகள் பலம் வலுக்கிறது.

போர் முனை நிகழ்ச்சி விளக்கம்

ஹிட்லர் உயிருக்கு உலை

உலகத்தையே உருட்டி விழுங்கி விடுவதாக உறுமினார் ஹிட்லர். தனக்குக் குறுக்கே யிருந்தவர்களின் தலைகளை யெல்லாம் உருட்டினார் தரை மீது. வாயு வேக மனோ வேகமாய் ஹிட்லருடைய படைகள் விரைந்து போய், வெற்றிகள் பல கண்டன. இவையெல்லாம் இப்போது பழைய கதைகளாகி விட்டன. உலகம் ஹிட்லரைக் கண்டு அஞ்சிய காலம் மாறி, உலகத்தைக் கண்டு ஹிட்லர் அஞ்சும்படியான காலம் ஏற்பட்டு விட்டது. "முற் பகல் செய்யின் பிற்பகல் விளையும்" அல்லவா? இன்று ஹிட்லருடைய உயிருக்கே ஆபத்து நேர இருந்தது. இதற்குக் காரணமாயிருந்தவர்கள் இவருடைய சிப்பந்திகளே. இது வரை கைகட்டி வாய் பொத்திக் கொண்டிருந்த சிப்பந்திகள் இப்போது இத்தகைய கொடுமையை இழைக்க முன் வரக் காரணமென்ன வென்பது ஆராய வேண்டுவது அவசியம். இதற்குக் காரணம் அதிருப்தி தான் என்று யாரும் எளிதில் தெரிந்து கொள்ளலாம். ஹிட்லரின் போக்குத் தான் இதற்குக் காரணம் என்பது வெள்ளிடைமலை. இந்த யுத்தத்தின் பெயரால் கோடிக்கணக்கான மக்களைப் பலி கொடுத்துவிட்டார் ஹிட்லர். என்றாலும், அவருடைய நோக்கம் ஈடேறுவதற்கான வழி காணப்படவில்லை. இனியும் பலி கொடுக்க படைத் தலைவர்களில் ஒரு சாரார் துணியவில்லை யென்று தெரிகிறது.

தன் அந்தரங்க ஆலோசகர்களைக் கொண்டதோர் கூட்டத்திற்குப் போன ஹிட்லருடைய வலது புறத்தில் சுமார் 6 அடிகளுக்கப்பால் ஒரு வெடிகுண்டு வெடித்தது. அதனால் ஹிட்லருக்கு சிறு காயமொன்று பட்டது. ஆனால், அவருடைய ராயசக்காரரொருவரும் மற்றிருவரும் மாண்டார்கள். ஹிட்லர் தலை தப்பியது தம்பிரான் புண்ணியந் தான். தன் தலை தப்பியது கடவுள் செயலென்றும், தான் மேற்கொண்டுள்ள 'திருப்பணி'யை நிறைவேற்றும் பொருட்டுத் தான் தன்னைக் கடவுள் காப்பாற்றினார் என்றும் ஹிட்லர் குறிப்பிட்டிருக்கிறார். 'துஷ்ட நிக்ரக சிஷ்ட பரிபால'னான கடவுள் இவ்வளவு இலகுவிலா ஹிட்லர் உயிரை வாங்குவார்? இவர் பிறருக்கு இழைத்த கொடுமைகளுக்கெல்லாம் பதிலுக்குப் பதில் இல்லாமற் போய்விடுமா? இப்போதே ஜெர்மனியில் புரட்சி ஆரம்பமாகிவிட்டது. புரட்சிக்கு மூலம் அதிருப்தியும் வெறுப்புந் தான். இவ்விரண்டும் இப்போது நிறைந்திருக்கின்றன மக்கள் உள்ளத்தில். புரட்சி ஓங்கும்போது ஹிட்லர் நிலை என்னவாகும் என்று நாம் சொல்லத் தேவையில்லை. அவர் கட்டளைக்குப் பலியான லட்சக்கணக்கான யூதர்களின் ஆவிகள் அவர் உள்ளத்தே பெரும் பீதியை யுண்டாக்கிக் கொண்டிருக்கின்றன வென்பது திண்ணம். அவை கட்டாயம் பழி வாங்கியே தீரும்.

* * *

ஜப்பான் மந்திரி சபை மாற்றம்.

ஹிட்லர் உயிருக்கு ஆபத்து நேரவிருந்த அன்றையத் தினம், மற்றொரு முக்கியமான சம்பவமும் நடந்திருக்கிறது. ஜப்பானிய மந்திரி சபையினர் தம் பதவிகளை ராஜிநாமாச் செய்து விட்டனர். இதற்கு ஒரே காரணந்தான் இருக்கக் கூடும். பசிபிக் தீவுகளில் ஜப்பானியர் அடைந்த தோல்விகள் தான் இதற்குக் காரணமா யிருக்க வேண்டும். டோஜோ மந்திரி சபை கலைந்து போனதுபற்றி இங்கே கவலை படுவார் யாருமில்லை. இப்போது காய்சோ தலைமையில் மற்றொரு மந்திரி சபை யமைந்திருக்கிறது. இவர்கள் பழைய பெருச்சாளிகள். அரசாங்க நிர்வாக ஆதிக்கத்தை நன்கு அனுபவித்தவர்கள். கொடுமையின் சின்னங்களாகக் கொதித்தவர்கள். கொலை புரிவதையே தம் குல விரதமாகக் கொண்டவர்கள்.

ஒரு குஸ்திப் பந்தயம் நடக்கிறது. இருவர் போராடுகின்றனர். ஒருவன் தோற்கிறான். அவனைச் சேர்ந்த மற்றொருவன் வெற்றி வீரன் மீது பாய்ந்து 'என்னோடு சண்டைக்கு நில்' என்று கேட்கிறான்.

அது போலத் தான் இருக்கிறது இந்த மந்திரி சபை யமைந்திருப்பதும். தம் தோழரான ஹிட்லர் தோற்று வருவது தெரிந்திருந்தும், இந்தக் குரூராத்மாக்கள் ஜப்பானில் மந்திரி சபையை யமைத்திருக்கின்றன வென்றால், அவர்கள் நோக்கம் வெளிப்படையாகத் தெரிகிறது. பிறரை நாசப்படுத்த வேண்டும் மென்பது தான் அவர்களுடைய எண்ணமா யிருக்க வேண்டும். 'கெடுவான் கேடு நினைப்பான்'. ஆகவே, பிறருக்குத் தீங்கு எண்ணும் ஒருவன், தானே அத் தீங்குக்கு ஆளாவான். இதற்கு இந்த மந்திரி சபையார் மட்டும் தப்ப முடியுமா?

* * *

சீன மக்கள் கொள்கைகள்.

சீன-ஜப்பானியப் போர் ஆரம்பமாகி 7 ஆண்டுகளுக்கு மேல் ஆகி விட்டது. ஜூலை மாதம் 6-ம் தேதி இது பற்றி ஜெனரல் ஷியாங் கெய் ஷேக் ஒரு பிரசங்கம் செய்தார். "இந்தப் போராட்டத்தில் வெற்றி பெற்று இழந்த நாடுகளை மீண்டும் கைப்பற்றும் வரையில், தொடர்ந்து போராட்டத்தை நடத்த வேண்டு" மென்று, சீன மக்களும் சீனத் தலைவர்களும் உறுதியான முடிவுக்கு வந்திருக்கிறார்களென்று அப்போது குறிப்பிட்டார்.

இவ்வளவு கொடிய நிர்ப்பந்தங்களுக்கும் ஆளானாலும், வெற்றி பெறும் வரை இந்தப் போராட்டத்தை நடத்தியே தீர வேண்டு மென்னும் உறுதிக்கு வரக் காரண மென்ன? இதற்கு அம்மக்களின் தெய்வீக உணர்ச்சி தான் காரணமா யிருக்க வேண்டும். தன்னம்பிக்கை அவர்களுடைய பரம்பரைச் சொத்து. இவ்வுலகத்தில் கஷ்டம் என்பது மில்லை; சுலபம் என்பது மில்லை. இவை தான் அவர்கள் கொள்கை. இதினின்று என்ன விளங்குகிற தென்றால், மகா கஷ்டமான தோர் காரியத்தைச் சாதித்து முடிக்க வேண்டுமானால் தீவிர முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டியது மிகவும் அவசியம் என்றேற்படுகிறது. சீனர்களுக்கு இன்னும் இதுபோன்ற இரண்டு கொள்கைகளும் உண்டு. (1) 'தன் கையே தனக்குதவி.' (2) 'தன் கையை யூன்றித் தான் கரணம் போட வேண்டும்'. அப்போது தான் பலன் பெறலாம் என்பது அவர்களது ஆசை. இந்தக் கொள்கைகளை இந்தப் போராட்டம் முழுவதிலும் பரக்கக் காணலாம்.

போராட்டங்கள்

சென்ற 1943-ம் வருஷம் ஜூலை மாதம் 6-ம் தேதி வெளியானதோர் செய்தியில், அந்த 6-வது வருஷத்தில், 4 பெரும் போராட்டங்களும், 71 முக்கியமான போராட்டங்களும், 3,034 சிறிய போராட்டங்களும், 1,043 திடீர்த் தாக்குதல்களும் நடைபெற்றனவென்று அறிவிக்கப்பட்டது. அன்றியும் 2,809 ஜப்பானியர்கள் கைது செய்யப்பட்டன ரென்றும் ஏராளமான யுத்தத் தளவாடங்கள் கைப்பற்றப் பட்டன வென்றும் அறிவிக்கப் பட்டது. அது போலவே இந்த வருஷமும் நல்ல பலன் கிடைத்திருக்க வேண்டும். இந்த வருஷம் 5 பெரும் போராட்டங்கள் நடை பெற்றன. அவை யாவன:—குவாங்டே போர், செங்டே போர், ஹோனான் போர், காண்டன்-ஹாங்கோ ரயில்வே போர், யூனான் போர்.

மூன்று பெரும் போர்கள்

ஹாங்கிங்குக்குத் தென் கிழக்கே 85 மைல் தூரத்தில் குவாங்டே இருக்கிறது. இது ஒரு முக்கியமான ரயில்வே ஸ்டேஷன். இதைத் தாக்கிப் பிடிக்க வேண்டு மென்று ஜப்பானியர்கள் ஆசை கொண்டார்கள். ஆகவே முதலில் ஆன்வேயைத் தாக்கினார்கள். இது பற்றி 1943-ம் வருஷம் அக்டோபர் மாதம் 4-ம் ததி சீன பிரதம படைத் தலைவர் அறிவித்தார். இந்த ரயில்வே ஸ்டேஷனைக் கைப்பற்றுவதனால் ஜப்பானியர்கள் அடையும் நன்மை என்ன? நாங்கிங்-ஷாங்ஹை-ஹாங்செளவுக்கு உட்பட்ட பகுதி ஜப்பானியர்கள் வசமுள்ளது. இதை ஜப்பானியர்கள் கோட்டை என்று சொல்லலாம். சீனப் படைகளோ, கொரில்லாப் படைகளோ அந்த ரயில் வழியாக வந்து திரண்டு விடுவார்களானால், ஜப்பானியர்களுக்கு ஆபத்தாகப் போய் விடும். சாதாரணமாகச் சீனர்கள் முதல் தரத்தில் பின்வாங்கி, எதிரியை முன்னேற விட்டு, பிறகு விழுந்து தாக்குவது வழக்கம். அதே முறையைத் தான் இங்கேயும் கடைப் பிடித்தார்கள். ஆகவே, வழக்கம் போல, முதலில் முன்னேறிய ஜப்பானியப் படைகள் பிறகு பின் வாங்கும்படி நேரிட்டது.

ஹூனான் மாகாணத்தின் தலைநகரம் சாங்ஷா. இதன் தலை வாசலில் இருப்பது சாங்டே. யாங்ட்சியிலிருந்து ஜப்பானியப் படைகள் சாங்டாவின் வெளி யரண்கள் வரை வந்து விட்டதாக நவம்பர் மாதம் 22-ம் தேதி சீன பிரதம படைத் தலைவர் அறிவித்தார். எதிரிகள் விமானங்களைக் கொண்டும், பீரங்கிகளின் உதவியினாலும், பாரசூட்டுகள் வழியாகவும் வந்திறங்கி அந்நகரத்தை நவம்பர் மாதம் 23-ம் தேதி வளைத்துக் கொண்டார்கள். 10 நாட்கள் கடுமையாக முற்றுகை யிட்டனர். அங்கிருந்த சீனப் படை மகா வீரத்தோடு எதிர்த்து நின்றது. என்றாலும் ஜப்பானியரின் எண்ணிக்கையும் தளவாடங்களும் வெகு அதிகம். ஆகவே, கடைசியாக சீனப் படைகள் பின்வாங்க நேர்ந்தது. அப்போது அதில் 300 பேர்கள் மட்டுந்தான் இருந்தார்கள். அன்று டிசம்பர் மாதம் 3-ம் தேதி. ஆறு நாட்களுக்குப் பிறகு, அதாவது டிசம்பர் மாதம் 9-ம் தேதி, சாங்ஷா வெற்றி வீரரெனப் புகழ் பெற்ற ஜெனரல் ஸ்யூ யூ சாங், சாங்டேயினின்று ஜப்பானியப் படைகளை விரட்டி யடித்தார். டிசம்பர் மாதம் 21-ம் தேதிக்குள் லீசின், டிசிங்ஷி, நான்சீன், டன்சியாங் ஆகிய பட்டணங்களைக் கைப்பற்றி, ஜப்பானியர்களை முன்பிருந்த இடத்திற்கே விரட்டி யடித்தார். இந்தப் போராட்டத்தில் ஜப்பானியப் படைகளி லிருந்த 1 லட்சம் பேர்களில் ஏறக்குறைய 40,000 பேர்கள் கொல்லப்பட்டனர் அல்லது காயப்பட்டனர்.

இரண்டு நோக்கங்களைக் கொண்டு ஜப்பானியர் இந்தப் போராட்டத்தை ஆரம்பித்தனர். (1) ஹாங்கோவோடு நேர்போக்கு வரவு அமைத்துக் கொள்ள வேண்டும், (2) ஷான்சி மாகாணத்தின் தலை வாசலிலிருக்கும் டங்குவான் கணவாய்க்கு லுங்கெய் யில்வே மூலம் போவதற்கு வழி ஏற்படவேண்டும். தகுந்த ஆயத்தங்களோடு தான் 1944-ம் வருஷம் ஏப்ரல் மாதக் கடைசியில் இந்தப் போராட்டம் ஆரம்பமானது. தெற்கே யிருந்து வரும் படைக்கு உதவியாக ஹாங்கோவிலும் ஒரு சிறந்த படை ஆயத்தமா யிருந்தது.

இந்தப் போராட்டத்தின் முதற் கட்டம் வெகு விரைவாகவும் வெற்றிகரமாகவும் முடிந்தது. முதலில் பீகிங்-ஹாங்கோ ரயில்வேயிலுள்ள செங்சோ பிடிபட்டது. பிறகு அந்த ரயில்வே சின்யாங் வரையில் பிடிபட்டது. பின்வாங்கிய சீனப் படையோ முன்னேறி வந்து சின்யாங்குக்கும் சூபாங்குக்கும் இடையேயுள்ள 50 மைல் விஸ்தீர்ணத்தையும் கைப்பற்றிக் கொண்டது. ஆகவே, பீகிங்கிலிருந்து ஹாங்கோ வரையுள்ள ரயில்வேயைப் பிடிக்க வேண்டு மென்று ஜப்பானியர்கள் கொண்ட எண்ணம் ஈடேற வில்லை.

இந்தப் போராட்டத்தின் முடிவு என்னாகும் என்று சொல்லுவதற்கில்லை. இப்போது ஜப்பானியர்கள் பின் வாங்குவதாகத் தெரிகிறது. சீனப் படைகள் இப்போது வெற்றிகரமாகத் தற்காத்துக் கொண்டிருப்பதற்குக் காரணம் சீன-அமெரிக்கக் கூட்டுப் படைகள் அளித்த விமான பல மென்று சொல்லலாம்.

ஜப்பானியர் பெரும் முயற்சி

சீனாவில் தாம் வேரூன்றிக் கொள்ளும் பொருட்டு ஜப்பானியர் நடத்திய போராட்டங்களிலெல்லாம் இந்த காண்டன்-ஹாங்கோ ரயில்வே போராட்டந் தான் மிகவும் முக்கியமானது. இந்தப் போர் நடத்துவதில் அவர்களுடைய நோக்கங்கள் என்ன? முதலாவதாக, யாங்ட்சி பள்ளத் தாக்குக்கும் காண்டன்-ஹாங்காங் பகுதிக்கும் ரயில் முதலிய போக்கு வரவு சாதனங்கள் அமைப்பது. 2. பூகின் கடற்கரைக்கும் மேற்கு சீனாவிற்கும் இடையேயுள்ள வழி வெகுவாக அகன்றிருக்கிறது. இதன் வழியாக மேற்கேயிருந்து சீனப் படைகள் தெற்கேயுள்ள கடற்கரைக்கு வந்து பிரிட்டிஷ் அல்லது அமெரிக்கக் கடற் படையோடு சேரக் கூடும். ஆகவே, இந்தப் பெரு வழியை மூடி விட வேண்டும். 3. தென் சீனாவில் ஜப்பானியர் வசப்பட்ட பகுதிகளுக்கு அதிகப்படி படைகளையோ, தளவாடங்களையோ அதிக ஆபத்திற்குள்ளாகாமல் அனுப்ப வேண்டும்.

இந்தப் போராட்டம் ஜப்பானியர்களின் கடமையாகி விட்டது. ஜப்பான் தீவுகளின் தற்காப்பிற்கே இது மிகவும் முக்கியமானது. இந்தப் போராட்டத்தில் ஜப்பானியர்கள் வெற்றி பெறுவார்களானால், சீனாவிலிருந்து ஜப்பானைத் தாக்குவதற்கு

(6-ம் பக்கம் பார்க்க)

எட்டாம் இந்தியப் படை

இத்தாலியப் போராட்டக் காதைகள்

"டெய்லி எக்ஸ்பிரஸ்" பத்திரிகையின் யுத்த நிருபராக இத்தாலியி லிருப்பவர் எழுதியதன் மொழி பெயர்ப்பு :—

போராட்டத்திற் சிறந்து விளங்கும் படைக்கு ஒரு எடுத்துக் காட்டாக எட்டாவது இந்தியப் படையின் அருஞ் செயல்கள் எமக்குக் கூறப் பட்டன. இந்தப் படை சென்ற 8½ மாத காலமாக இத்தாலியில் போராடிக் கொண்டிருக்கிறது.

முதலாவதாக, திறமை.—இந்தியர்கள், பம்பாயில் பிறந்து வளர்ந்து, பனி மலைகளையே பார்த்தறியாதவர்களுங் கூட, இத்தாலிய மலைகளில் போராடிய சிறப்பைக் கண்டு, பிரிட்டிஷ் படையினரும் எதிரிகளுங் கூட மலைத்துப் போயினர். ஒரு கிராமத்தில் இராக் காலத்தில் கைகலந்து வீடு வீடாகப் போய்ப் போராடுவதில் தலை சிறந்து விளங்குகின்றனர்.

இரண்டாவதாக, வீரம்.—இந்தப் படையினர் சாங்ரோ ஆற்றைக் கடந்து கொண்டிருக்கும் போது ஆற்றில் வெள்ளம் திடீரென அதிகரித்துவிட்டது. ஆகவே, துண்டிக்கப்பட்டனர். ஆனால், அவர்களுக்கு உதவியாகப் பின் தொடர்ந்து செல்லும் சமையற்காரரும், தெருப் பெருக்குவோரும், தண்ணீர் எடுப்பவர்களும் தாமாகவே முன் வந்து, எதிரி குண்டுகள் விழுவதையும் பொருட் படுத்தாமல், சப்ளைகள் கொண்டு போனார்கள். அவர்களில் ஒரு சிலர் கொல்லப்பட்டனர்; பலர் காயப்பட்டனர். மற்றவர்களோ இரவு முழுதும் சாமான்களை ஆற்றுக்கு அப்பால் கொண்டு போய்ச் சேர்த்துக் கொண்டிருந்தனர்.

மூன்றாவதாக, அக்கரை கொள்ளுதல். நாங்களிருந்த இடத்தை யடுத்திருக்கும் ஒரு ஆற்றிற்கு இங்கிருந்து ஒரு பாலங் கட்டுவது முடியாத காரியம். இதை அவர்களிடம் சொன்ன போது அவர்கள் அந்த ஆற்றைக் கடந்து போய், அக்கரையில் ஒரு இறங்கு துறையைக் கட்டி, அங்கிருந்து பாலத்தைக் கட்டிக் கொண்டு வந்து முடித்தார்கள். இதன் மூலம் அவர்களுக்கு ஒரு சிறிது பயம் யுண்டாகக் கூடுமென்று நினைத்திருந்தேன். ஆனால் அது ஒரு பெருந் தாக்குதலாக மாறியது.

நான்காவதாக, கூட்டுறவு.—காரிக்ளியானோ போர் முனையில், இந்தியப் படைகள் போக்குக் காட்டி விலகி வேறு வழியாகப் போனது. அப்போது, மற்றொரு பக்கவாட்டிலிருந்த பிரிட்டிஷ் படைகள் அங்கேயே இருந்தன. அப்போது அந்த பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர் இந்தியப் படையினரைப் பார்த்து "நீங்கள் உதவி செய்வீர்களா?" என்று கேட்டார். "மீண்டும் ஒரு முறை நாங்கள் அந்தப் பக்கவாட்டில் போய் எதிரிக்குப் போக்குக் காட்டுகிறோம்" என்று விடையளித்தார்கள். அதன்படியே செய்தார்கள். அதன் பயனாக, பிரிட்டிஷ் படைகள் முன்னேற முடிந்தது.

ஐந்தாவது சமயோசித புத்தி.—பல முறை ஜெர்மானியர்கள் சிக்க வைக்கப் பட்டார்கள். ஏனென்றால், பாலங்களையும், ரோடுகளையும் நாசஞ் செய்வதனால், நம்மைத் தடுத்து நிறுத்தி விடக் கூடுமென்று அவர்கள் நினைத்தார்கள். ஆனால் இந்தியர்களோ தம் குதிரைகள் மீது சப்ளைகளை ஏற்றிக் கொண்டு மலைகளினின் றிறங்கிப் போய் எதிரிகளை வளைந்து கொண்டார்கள். இவ்வாறாக அவர்கள் எதிரி மோட்டார் வண்டிகளையும் பீரங்கிகளையும் அடிக்கடி கைப்பற்றி, எங்கெங்கே தடைகள் ஏற்படுகின்றனவோ அங்கெல்லாம் சப்ளைகள் கொண்டு போய்ச் சேர்த்து வருகிறார்கள்.

(5-ம் பக்கம் தொடர்ச்சி)

எதிரிக்கு அங்கே தளங் கூடக் கிடைக்காமற் போய்விடும். ஆகவே தான், இப்போது ஹூனன் மாகாணத்தில் அமெரிக்க விமான தளமா யிருக்கும் ஹெங்யாங்கைக் கைப்பற்ற ஜப்பானியர்கள் பெரு முயற்சி செய்கின்றனர். இங்கே ஜப்பானியர்கள் தோற்றால், நெடு நாட்கள் வரை எதிர்த்து நிற்க முடியாது.

சாங்ஷாவைக் கைப்பற்ற மூன்று முறை ஜப்பானியர்கள் முயன்றனர். மூன்று முறையும் தோற்றனர். கடைசியாக, ஜூன் மாதம் 18-ம் தேதி கைப்பற்றினர். பிறகு விரைவாக ஹெங்யாங் மீது பாய்ந்தனர். பிறகு வழக்கம் போல் பின் வாங்கினார்கள். நாம் கையாளும் தந்திரத்தை அவர்களும் கற்றுக் கொண்டார்கள் போலும். சீனப் படையினர் தம் திறமையை இங்கே மெய்ப்பித்து விட்டார்கள். ஹெங்யாங்கிலும் அதைச் சுற்றிலுமிருந்த ஜப்பானியர்கள் முன்னேற முடியாதபடி தடுத்து விட்டனர். பிறகு, இப்போது ஜப்பானியர்கள் சாங்ஷாவுக்குப் பின் வாங்கிக் கொண்டிருக்கின்றனர். இவர்கள் பின்வாங்கும் வேகத்தைப் பார்த்தால், இவர்கள் எங்கே போய் நிற்கப் போகிறார்கள் என்று சொல்லுவதற்கில்லை.

யூனன் போராட்டம்

வட பர்மாவில் மோகாங்கையும் மிட்கியானாவிலும் கடும் போராடிக் கொண்டிருக்கும் ஜப்பானியப் படைகளின் கவனத்தை ஈர்க்கும் பொருட்டு, யூனன் போராட்டத்தை சீனர்கள் தான் ஆரம்பித்தார்கள். அடுத்தபடியாக வட பர்மாவில் போராடிக் கொண்டிருக்கும் சீனப் படைகளுடன் யூனன் பகுதியிலுள்ள படைகள் ஆவலாயிருந்தன. சீனாவுக்கும் வட பர்மாவுக்கும் போக்கு வரவிற்கு, லிடோ ரோடு தான் இருக்கின்றது. இதையும் சீனர்கள் கைப்பற்ற வேண்டும். இந்தத் துறையில் சீனர்கள் ஓரளவிற்கு முன்னேறி, டெங்சுங், லங்லிங் என்னும் முக்கியமான ஜப்பானிய தளங்களை நோக்கி வந்து கொண்டிருக்கிறார்கள். டெங்சுங்குக்கு வடக்கே 5 மைல் தூரத்திற் கப்பாலும், லங்லிங்குக்கு வட மேற்கே 6 மைல் தூரத்திற்கப்பாலும் போராட்டம் நடைபெறுவதாகத் தெரிகிறது. லங்லிங்குக்குத் தெற்கே சில இடங்களில் சீனப் படைகள் புகுந்துவிட்டதாகத் தெரிகிறது.

ஜெனரல் சின்னாண்ட் தலைமையிலுள்ள 14-வது அமெரிக்க விமானப் படையும், சீன விமானப் படையும் சீனப் படைகளின் தற்காப்பின் பொருட்டு மிகச் சிறந்த முறையில் பணியாற்றின. இது வரை சீனர்கள் அடைந்த வெற்றிகளுக்குக் காரணம் ஜெனரல் சின்னாண்ட் உதவி செய்ததுதான். மேலும், ஹங்கோ, வூச்சாங், குய்கியாங், காண்டன், ஹாங்காங் முதலிய ஜப்பானிய தளங்களையும் அப்படைகள் வெடிகுண்டுகளால் தாக்கின. பூச்சோவுக்கு 125 மைல் தூரத்தில் பார்மோசா தீவிலுள்ள ஷின்ஷுகோ என்னும் ஜப்பானிய விமான தளத்தையும் வெகு தைரியத்தோடு 1943-ம் வருஷம் நவம்பர் மாதம் 25-ம் தேதி தாக்கினார்.

மகா கஷ்ட நிலைமையில் சென்ற 7 வருஷங்களாக ஜப்பானியருடன் போராடிக் கொண்டிருக்கும் சீனா போரின் 8 வருஷமும் ஆரம்பமாகிவிட்டது. எதிரியை எதிர்த்தே தீருவோம் என்னும் உணர்ச்சி கொஞ்சமும் குன்றவேயில்லை. பிறவிடங்களில் நடைபெறும் சம்பவங்களைக் கொண்டு பார்த்தால், முடிவாக நமக்குத்தான் வெற்றி என்று 'உள்ளங்கை நெல்லிக்கனி' போல் தெரிகிறது. சென்ற வருஷத்தைவிட இந்த வருஷம் வட பர்மாவிலும் பசிபிக் தீவுகளிலும் நேசநாட்டுப் படைகளின் நோக்கம் விரைவில் ஈடேறும் என்னும் நம்பிக்கைக்கு அதிக இடமுண்டு.

வானொலி நாட் குறிப்புக்கள்

1—8—44 சென்னை—மாலை 7-00 மணிக்கு—"நடை முதல் பேச்சு."
ஷை திருச்சி—மாலை 7-15 மணிக்கு—"வாடகைக் கட்டுப்பாட்டுக் கட்டளை"—திருச்சி வாடகைக் கட்டுப்பாட்டு உத்தியோகஸ்தர் மிஸ்டர் எம். எம். சின்னதுரை.

2—8—44 சென்னை—மாலை 7-00 மணிக்கு—"அச்சுப்பிரசார முரண்கள்."
ஷை திருச்சி—மாலை 7-15 மணிக்கு—"அச்சுக்குரல்" — ரெவரண்ட் பாதர் எல். எம். பாலம், எஸ்.ஜே.

4—8—44 சென்னை—மாலை 7-00 மணிக்கு—"தற்காப்பு ஏற்பாடுகள்"—ராவ் சாஹிப் டி. ஆர். கோதண்டராம முதலியார்.

நோட்டுப் பெருக்கமும் சேமிப்பின் அவசியமும்

(ஜோசப் சின்னப்பா, B.A., திருச்சிராப்பள்ளி.)

சர்க்கார் பிரசாரம் நடக்கிறது :—"வெற்றிக்காகச் சேமித்து வையுங்கள் யுத்தத்துக்குப் பின் இந்திய மக்கள் வாழ்க்கை நிலை உயருவதற்காகச் சேமித்து வையுங்கள்; இரட்டிப்பு விலை, மூன்று பங்கு நான்கு பங்கு விலை கொடுத்து நில புலன்கள் வாங்காதீர்கள், வீடு வாசல் கட்டாதீர்கள்; யுத்த கால க்ஷேமத்தில் சம்பாதித்த பணத்தை வீணில் விரயம் செய்யாதீர்கள்" என்றெல்லாம் பலத்த பிரசாரம் நடக்கிறது சர்க்கார் செலவில். பத்திரிகையை எடுத்தால் "யுத்த நிதிக்கு உதவுங்கள், தர்மம் கொடுங்கள் என்று விளம்பரம்: அல்லது தற்காப்புப் பத்திரங்களாவது வாங்குங்கள், சர்க்காருக்குச் சும்மா கொடுக்காதே போனாலும் கடனாகவாவது கொடுங்கள்" என்று ஓயாத விளம்பரங்களைப் படிக்கிறோம். தபாலாபீசுக்கு ஸ்டாம்ப் வாங்கப் போனால் "12 வருஷ தேசிய சேமிப்பு சர்ட்டிபிகேட்டுகளை வாங்குங்கள்" என்று அறைகூவி 4 அடிக்கு 2 அடியில் பெரிய மூணு கலர் போஸ்டர்கள் ஒட்டி வைத்திருக்கிறார்கள். போதாக் குறைக்கு ரெவின்யூ இலாகா உத்தியோகஸ்தர்கள் கிராமாந்தரங்களில் வீடு வீடாகச் சென்று சொல்ப சேமிப்பு சர்ட்டிபிகேட்டுகளை சாமானிய வருமானமுள்ளவர்களுக்கு விற்கிறதென்று முனைந்து நிற்கிறார்கள். என் இவ்வளவு ஆர்பாட்டம்? என் இவ்வளவு சிரமம்.

திண்ணைப் பொருளாதாரம்

"சர்க்காருக்கு தேசிய தற்காப்புக்குச் செலவு செய்ய ரூபாய் வேணுமானால் நாம் மிச்சம் பண்ணி, அவர்களுக்குக் கடன் கொடுத்துத் தானா அவர்களுக்குப் பணம் கிடைக்கணும். ரிசர்வ் பாங்கு இருக்கவே இருக்கிறது. சர்க்கார் அதிகாரம் பெற்று ரூபாய் நோட்டுக்கள் அடிக்கத்தான் செய்கிறார்களே. என்? கூட நாலு ரீம் பேப்பர் போட்டால், ஒத்தை ரூபாய் நோட்டு அடிக்க வேண்டாமே! ஆயிர ரூபாய் நோட்டுகள் அடித்து விடுகிறது? அவர்கள் யாரைக் கேட்க வேண்டும்?" இந்த மாதிரி கேள்விகளும், சாதுரியமான யோசனைகளும் நம் நாட்டில், அறியாத, விஷயமறியாத மக்களிடையே காணப்படுவது சர்வ சாதாரணம். இவை யுத்தப் பொருளாதார சாஸ்திரத்தில், ஊர் வம்புப் பொருளாதாரம், திண்ணைப் பொருளாதாரம் என்னும் தணிக்கையைச் சேர்ந்தவை. கொஞ்சம் விட்டுப் பிறகு விஷயத்தை ஆராய்வோம்.

* * *

முதலாளியிடம் முறையீடு

சென்ற மாதத் துவக்கத்தில் இந்த மாகாணத்தின் செல்வாக்குள்ள நகரங்களுள் ஒன்றில் சாயுங்காலம் பொழுதுபோக்காக, அழகான பார்க் ஒன்று இருந்தது, அங்கு சென்றிருந்தேன். ஏராளமான கூட்டம். தொழிலாளர் கூட்டமாம். 8 பேர் கூடிக் கோலடித்துக் கொண்டிருந்தார்கள், பிரசங்கம் ஆரம்பிக்கும் வரை. ஏதோ ஒரு சினிமாப் பாட்டு ராகத்தில் பாட்டுப் பாடி கோலடித்துக் கொண்டிருந்தார்கள். அதில் இரண்டு வரி மாத்திரம் என் நினைவிலிருக்கிறது. பஞ்சப்படி வேண்டுமென்பது தான் பாட்டின் கருத்துப் போலும்.

"சம்பளத்தை வாங்கிப் பாத்தா
தம்படியும் மிச்சமில்லே—ஐயோ
அம்பலமா நிக்கிறோமே ..கடவுளே..
அடக் கடவுளே,"

என்று உருக்கமாக, கடவுளுக்கல்ல, முதலாளிகள் காதில் விழாதா என்று பாடிக் கோலடித்தார்கள்.

விலைவாசிகளைக் குறைப்பதெப்படி?

இவர்கள் கோரிக்கை என்ன? ஏற்கெனவே ரூபாய்க்கு ரூபாய் பஞ்சப்படி பெறும் அந்தத் தொழிலாள மக்கள் என்ன கேட்கிறார்கள்? யுத்தப்படி அதிகரிக்கப்பட வேண்டுமென்று. என்? விலைவாசிகள், அத்தியாவசியப் பொருள்களெல்லாம் ஒன்றுக்கு, 2, 3, நாலு பங்கு கூட விலையேறிப் போய் விட்டன. உயிர் வாழப் போதிய கூலி வேண்டும் என்று அலறுகிறார்கள். விலைவாசிகள் ஏறிக் கொண்டே போகின்றன. அதைத் தொடர்ந்து சம்பளம் கூலி இவைகள் முக்கி முணகிக்கொண்டு ஒருவாறு ஏற்றப்படுகின்றன. நூற்றுக்குப் பத்து இருபது ....அல்ல 50, நூறு வீதம் தான் யுத்தப்படி கொடுக்கப் பட்டாலும், விலைவாசி ஏறிக் கொண்டெ போகிறதே, அதைத் தொட்டுப் பிடித்துவிட முடியுமா? காரில் போகிறவனை, சைகிளில் துரத்திப் பிடிக்க முயலுகிற மாதிரி. நீ துரத்துகிறாய் என்று தானே அவன் அப்படி வேகமாய்ப் பறக்கிறான்? அவன் வேகத்துக்கு முட்டுக் கட்டை போடாமல் அவனைப் பிடித்துவிட முடியுமா? விலைவாசி ஏற்றத்துக்குக் காரணமென்ன என்று கண்டுபிடிக்க வேண்டும் முதலில். அக்காரணங்களை முதலில் நீக்க வேண்டும் யுத்தத்தால் ஏற்படும் சங்கடங்கள் ஒரு காரணமாயிருந்தால், அந்தச் சங்கடங்களை கூடிய மட்டுமாவது மட்டுப்படுத்த வேண்டும். விலைவாசி அபாரமாக ஏறும் காரணங்களைச் சமாளித்த பின்னர், வியாபாரிகள், தேசத்துரோகமாக, சுய நலத்தால் கொள்ளை லாபத்துக்கு ஆசைப்பட்டு, விலைகளை ஏற்றாமல் கண்ட்ரோல் ஆர்டர்களைக் கொண்டு நெருக்கிப் பிடிக்கலாம்.

பணப் புழக்கம் அதிகம்; பண்டம் குறைவு

தேசத்திலே தற்காலம் பணப் புழக்கம் அதிகமாய் இருப்பதால், பணத்தின் மதிப்புக் குறைந்து போய் விட்டது என்பது கண் கூடாகக் காணும் விஷயம். பணம் மிஞ்சிப் போனதால் சரக்குகளுக்குக் கிராக்கி ஏற்பட்டிருக்கிறது. விற்கிறவன் சாமார்த்தியம் போல், வாங்குகிறவன் பண புஷ்டியைப் போல் நாலாயிரத்துக்கு வாங்கிய வீட்டுக்கு இருபதாயிரமோ, அல்லது 4 அணாவுக்கு வாங்கிய ஒரு வீசை உருளைக்கிழங்குக்கு 14 அணாவோ, ஒரு ரூபாயோ கூசாது விலை சொல்லுகிறார்கள். விற்றும் போகிறது. இந்தப் பணப்பெருக்கம், சமூகத்தில் ஏற்றத் தாழ்வுள்ள படிகள் இருக்கின்றனவே, பல படித்தான வருமான நிலைகள், அப்படிப்பட்ட எல்லாப் படியிலுள்ளவர்களுக்கும் வஞ்சகமில்லாமல் இரண்டு பங்கோ, இரண்டரைப் பங்கோ, மூன்று பங்கோ, எல்லா அந்தஸ்துள்ளவர்களுக்கும் சமமாக விருத்தியாயிருந்திருந்தால் கவலையேயில்லை, ஒவ்வொருவரும் அதே ரீதியில் விலை வைத்து வழக்கமான தேவைகளை வாங்கிவிடுவார்கள். அதுதான் இல்லை.

விலை உயர்வும் பஞ்சப் படியும்

வியாபாரிகள் கிடைத்த மட்டும் பார்ப்பார்கள். சர்க்கார் இரண்டு கண்களையும் திறந்து கொண்டு பார்த்துக் கொண்டே இருக்காவிட்டால் விலைவாசிகள் விஷம் ஏறுகிறாப் போல் ஏறிவிடுகிறது. உணவுப் பொருள்கள், உடை முதலிய அவசியப் பொருள்களை உற்பத்தி செய்வோர் வேண்டிய மட்டும் செல்வத்தைத் திரட்டிக் கொள்ள சமீப காலம் வரை வழியேற்பட்டிருந்தது. ஆனால் மாதச் சம்பளம் அல்லது வாரக் கூலி பெறும் மக்களோ தவித்துத் துடிக்கின்றனர். அங்கங்கே சர்க்காராகட்டும், சாமான்ய முதலாளிகளாகட்டும் கொடுக்கும் யுத்தப்படி விலைவாசி ஏற்றத்தில் கால் பங்குக்கு ஈடு கட்டுமோ, கட்டாதோ என்பதே சந்தேகம். நகர்ப் புறங்களில் பெருந் தொகையினராக வசித்து, வேண்டியதைக் கேட்டு சர்க்கார் காதையும் முதலாளிகள் காதையும் துளைக்கும்படி பலர் கூடி உரக்கக் கத்தும் சவுகரியம் உள்ள நகர்ப்புறத்தார்கள் பாடே இதுவானால், இனி கிராமாந்திரத்தில் சிதறிக் கிடக்கும் பண்ணையக் கூலிக்காரர் கதி எப்படியிருக்கும்? வானத்தைக் கிழிக்கக் கத்தினாலும் அவர்கள் கேட்பதைக் காதில் போட்டுக் கொள்வார் யார்? அவர்கள் பிழைக்கும் வழி என்ன?

பணப் பெருக்கமும் உற்பத்திக் குறைவும்

காரில் போகிறவனை சைகிளில் போய் துரத்திப் பிடிக்க முடியாதென்று சொன்னேன். காரை நிறுத்தப் பிரயாசைப்பட வேண்டும். அடுத்த போலீஸ் ஸ்டேஷனுக்காவது போனில் சொல்லி காரை நிறுத்த வேண்டுமல்லவா? இனி விலைவாசி ஏற்றம் எந்தக் காரில் போகிறது என்று பார்ப்போம். பிறகு எப்படி அதை நிறுத்துவது என்று யோசிப்போம். தேசத்திலே பணப் புழக்கம் அதிகமாய் விட்டது எல்லோரும் அறிந்த விஷயம். ஆஸ்பத்திரி சீட்டை எந்தப் பத்திரத்தில்

வைத்திருக்கிருர்களோ அந்தப் பத்திரம் தான் ஒத்தை ரூபாய் நோட்டுக்கு இப்போது கிடைத்திருக்கிறது. பணக்காரர் மேலும் மேலும் பணக்காரர் ஆகிக் கொண்டே யிருக்கிருர்கள். ஏழைகள் இன்னும் ஏழ்மை யடைகிருர்கள். ஆனலும் மொத்தத்தில் பார்க்கப் போனல் நோட்டுப் புழக்கம் யுத்த ஆரம்பத்தில் இருந்ததைப் போல் சுமார் 5 மடங்கு பெருகி யிருக்கிறது. காரணம் என்ன? யுத்தத்தில் ஈடுபட்ட சர்க்கார் தன் தேச மக்களிடமிருந்து ஏராளமான உணவுப் பொருள்கள், உடை தினுசுகள், யுத்த தளவாடங்கள் இவற்றை விலை கொடுத்துப் பெறுகின்றனர். சோல்ஜர்கள் பரிபாலனச் செலவு, சம்பள வகையருக்கள், விமான நிலையங்கள், ரெஜிமென்ட் காம்புகள், துறைமுக விஸ்தரிப்பு முதலிய தற்காப்புத் திட்டங்களுக்குக்காக ஏற்படும் கோடிக் கணக்கான ரூபாய் செலவில், பெரும்பான்மை ஜனங்களுக்கு உழைப்புக் கூலியாகவும், மரம் கல் முதலிய சாதனங்களுக்கு விலையாகவும் கண்டிராக்டர்கள் ஊதியமாகவும் ஜனங்கள் கையிலேயே திரும்ப வந்து தேசத்தில் புரண்டு வரும் பணம். இந்த யுத்த திட்டங்களால் ஜனங்களுக்கு உணவுப் பொருள்கள் நீங்கலாக மற்ற சொகுசுப் பொருள்கள் முன்னைப் போல் தாராளமாக உர்பத்தி செய்யப்படுவதில்லை. அப்பொருட்களின் உற்பத்தியில் ஈடுபட்டிருந்த மக்களையும், தொழில் நிலையங்களையும் தற்காப்புக்கு அவசியமான உற்பத்திகளுக்குத் திருப்பி விட்டிருக்கிருர்கள். இதனல் தேசத்தில் பணம் பெருக்கம் ஏற்பட, உற்பத்தி குறைவுபட்டிருக்கிறது.

லண்டன் இந்தியாவுக்குக் கடனளி

நேச தேசங்களிடமிருந்து அவர்களுக்கு நாம் அனுப்பிவரும் ரப்பர், ஈயம், எண்ணெய், தேயிலை முதலியவற்றிற்காகக் கிடைக்கும் நல்ல விலையும் சுற்று மார்க்கமாக நமது நாணயப் பெருக்கத்தை அதிகப் படுத்தி யிருக்கிறது. எப்படியென்ருல் இந்தியாவிலிருந்து நேச தேசங்களுக்கு அனுப்பப்படும் மூலாதாரப் பொருட்களுக்குள்ள விலை, லண்டனில் இந்தியா கணக்கில் வரவு வைக்கப் படுகிறது. இப்படி வரவு வைக்கப்பட்ட தொகை யுத்த ஆரம்பத்தில் நமது பேரில் இருந்த சுமார் 400 கோடி ரூபாய் பெருமான 30 கோடி பவுன் கடனை அடைத்தது மல்லாமல், இன்று இந்தியா கணக்கில் 300 கோடிப் பவுன் அதிக வரவும் இருக்கிறது. உள் நாட்டில் யுத்த முயற்சிக்காகச் செலவு செய்யும் தொகை நோட்டாக அடித்துக் கொடுக்கப்படுகிறது மேலே சொன்ன லண்டன் இருப்பை ஈடு காட்டி.

பிராமிசரி நோட்டுக்கள் போலத் தான்

இந்த விஷயத்தை நன்ருக அறிந்து கொள்ள வேண்டும். சர்க்கார் ரிசர்வ் பாங்கு மூலம் நோட் அடித்துக் கொடுப்பதென்ருல், நோட்டடிக்கக் கூடிய நீரோட்டமுள்ள பேபர் கிடைத்த மட்டும் அடித்துக் கொள்ளக் கூடும் என்று அர்த்தமல்ல. கரன்ஸி நோட்டு என்பதும் ஒருவகையான பிராமிஸரி நோட்டுத் தான். நாம் யாராவது ஒருவர் தனது சமூக அந்தஸ்தை உபயோகப்படுத்தி நம்பிக்கையின் பேரில் பிராமிஸரி நோட்டு எழுதிக் கொடுத்து விட்டு அடுத்தவர்களிடம் ரூபாய் பெற்றுக் கொள்கிருர் என்று வைத்துக் கொள்வோம். எந்த நோத்திலும் பிராமிஸரி நோட்டைக் கொண்டு போய்க் கொடுத்தால் பணம் திருப்பிக் கொடுத்துவிடுவான் என்ற நம்பிக்கை கடன் கொடுத்தவர்களிடம் நிலவும் வரை, நமது கடனைப் பெருக்கிக் கொண்டே போகலாம். ஆனல் என்றைக்காகவது அவர்கள் சந்தேகப்பட்டார்களானல், 4,000-க்கு பிராமிஸரி நோட்டு வெளியில் இருக்கிறதே, அந்த ஆள் கையில் 4,000-த்துக்குப் பொருள் இருக்குமோ என்று என்றைக்குச் சந்தேகம் எழுந்ததோ அன்றைக்குப் பிடித்தது சனியன். எல்லோரும் அடித்துப் பிடித்து வந்து ரூபாயைக் கேட்டு கலாட்டா செய்து விடுவார்கள். பாங்குகள் வீண் புரளியால் உடைந்து போவதும் இப்படித் தான். நல்ல காலத்தில் ஆயிரம் ரூபாய் வெளியில் கடன் வாங்கியிருக்கும் போது நம்மிடம் 400 ரூபாய் பொருள் வைத்துக் கொண்டிருந்தாலும் போதும் சாமர்த்தியமுள்ளவன், நாணயமுள்ளவன் என்று நம்பியிருப்பார்கள். அதே போல சர்க்காரும் பொது ஜனங்கள் நம்பிக்கை குறையா வண்ணம் ஓரளவு, நாணயமான அளவு, ஈடு வைத்துக் கொண்டு தான் காகித நோட்டு அடிப்பார்கள். போதிய ஈடில்லாமல் ஏராளமாய் நோட்டு அடித்துத் தான் சென்ற யுத்தத்தின் பிறகு ஜெர்மனியின் மார்க் என்னும் நாணயம் கேட்பாரின்றி சினிமா நோட்டீஸ் யோக்யதைக்கு வந்து சேர்ந்தது.

இந்திய அரசாங்கத்தாரின் முன் யோசனை

இந்த யுத்தத்திலோ எல்லா தேச சர்க்காரும் போதிய ஈடில்லாமல் நோட்டுப் பெருகி விடாமல் சர்வ ஜாக்கிரதையாய் இருக்கிருர்கள். இந்திய நோட்டுப் பெருக்கத்துக்கு ஈடு லண்டனில் நமக்குள்ள பவுன் வரவேயாகும். இந்திய சர்க்கார் இது விஷயத்தில் எவ்வளவு ஜாக்கிரதையாக இருந்து வந்திருகிருர்கள் என்பதற்கு அத்தாட்சி பண மார்க்கட்டில் இந்திய சர்க்காரின் கடன் பத்திரங்களுக்குள்ள கிராக்கியே போதிய அத்தாட்சியாகும். (ஆகவே, தக்க ஈடில்லாமல் சர்க்கார் நோட்டடிப்பதைப் போல் ஆபத்தான விஷயம் வேருென்றுமில்லையென்பது தெளிவு.) விஷயம் இப்படி யிருக்க, சிலர் நினைப்பது என்னவென்ருல் ரிசர்வ் பாங்கில் நோட்டு அடிக்கிருர்கள். ரிசர்வ் பாங்க் கவர்னர் வீட்டிலிருந்து அவர்மனைவியார் "வைரக்கல் மூக்குத்தி வந்திருக்கு, கையில் பணம் கொஞ்சம் முடையாயிருக்கிறது. போதாதற்கு கொஞ்சம் 300, 400 ரூபாய் அனுப்பிவையுங்கள்" என்று போனில் கூப்பிட்டுச் சொன்னல், உடனே பாங்கி கவர்னர் மிச்சம் மீதியுள்ள பேப்பரைக் கத்தரித்து வெட்டி ஒரு 5, 6 நூறு ரூபாய் நோட்டு அடித்து அனுப்பிவைப்பார் போலும்! விஷயமறியாத பேச்சு. ரிசர்வ் பாங்கி கவர்னருக்கு தமிழ் தெரியவா போகிறது என்ற தைரியத்தில் விளையாட்டாகச் சொன்னேன் இதை, உதாரணமாக.

விலைகள் உயர்ந்ததேன்?

யுத்த ஆரம்பத்தில் 170 கோடி ரூபாய் பெறுமான நோட்டுகள் புழக்கத்தில் இருந்தன இந்தியாவில். இன்று எவ்வளவோ தெரியாது. ஆனல் சென்ற செப்டம்பர் மாதத்துக்குள்ளாக 760 கோடி ரூபாய் பெறுமான நோட்டுகள் நம் நாட்டில் உலவும்படியாக நேர்ந்திருக்கிறது, யுத்த வரவு செலவு காரணமாக. இவ்வளவு பெருக்கமும் நாட்டில் பல படித்தான நிலையிலுள்ளவர்களுக்கும் சமமாக ஒரே சீராகக் கிடைக்க வில்லை என்பதை மனதில் வைத்துக் கொள்ள வேண்டும். பணம் இவ்வளவு பெருகினதால் ஒன்று. இரண்டாவது யுத்த தளவாட உற்பத்தி காரணமாக சிவிலியன்கள் தேவைகள் உற்பத்தி குறைந்துபோனது மற்ருென்று. இப்படியாக பணத்துக்கு மதிப்பு குறைவும் பொருள்களுக்கு கிராக்கியும் ஏற்பட்டு, விலைகள் தலைகால் தெரியாமல் ஏற ஆரம்பித்தன.

காரணம் எது என்று கண்டு பிடித்தாயிற்று. அதாவது காசுப் புழக்கம், அதாவது ஒரு சாரார் கையில் அதைக் குறைத்தால் காசுக்கு மதிப்பு ஏற்படும். முன்னே ஆறணுவுக்கு வாங்கிய பொருள் இப்பொழுது ஒரு ரூபாயாக விற்பது சர்வ சாதாரணம். வாழ்க்கைக்கு அவசியமான உணவு ஆடை முதலிய பொருள்கள் ஒன்றுக்கு இரண்டாக, மூன்ருக விலையேறிப் போவதில் தான் தேசத்தின் பெரும்பாலான பாடுபடும் மக்கள் மயங்கித் தவிக்கின்றனர். பிராந்தி விலை ஏறிப் போனல் கெட்டுப்போன தொன்றுமில்லை; ஒரு வகையில் காமிரா, சிகரெட் கேஸ் விலை யேறினல் தொலைகிறது. வாழ்க்கைக்கு ஆதாரமான பொருள்கள் விலையேறுவதைத் தடுக்க வேண்டும். அதிக லாபத்தை உத்தேசித்து, உற்பத்தியான அவசியப் பொருள்களை மறைத்து வைத்துக்கொண்டு, இல்லை இல்லை என்று சொல்லிவிட்டு கள்ள மார்க்கட்டில் விற்கிருர்களே, அந்தத் தேசத் துரோகிகளை சரிக் கட்ட ஆர்டினன்ஸ்கள், ஆர்டர்கள் பல உண்டு. அதைப் பற்றி இப்போது பேச வரவில்லை.

பணப் பெருக்கத்தைத் தடுக்கும் வழி

செல்வப் பெருக்கம் பணப் பெருக்கம் குறையவேண்டும். பெரும் விவசாயிகள் மிலிடரி கண்டிராக்டர்கள், பெரிய தொழிற்சாலை முதலாளிகள், தரகர்கள் இவர்கள் கையில் ஏராளமான பணம் புழங்கும்போது, அவர்கள் எதையும் என்ன விலையும் கொடுத்து வாங்கத் தயாரா யிருக்கும்போது, சம்பளம் சரி பெற்று வாழ்வை நடத்தும் மக்கள் பாடு என்னகும். இந்தப் பணப்புழக்கத்தை குறைக்க வழியில்லையா? உண்டு. பணமானது திரும்பச் சர்காரிடம் போய்ச் சேர வழி செய்ய வேண்டும். இது தான் ஒரேவழி. பெரும் பணக்காரர்கள் யுத்த

(10-ம் பக்கம் பார்க்க)

எதிர்பார்த்தது !

எதிர் பாராதது நடந்தால் தான் ஆச்சரியப் பட வேண்டும். ஆனால், எதிர் பார்த்து நடந்தால், "அ! அப்பவே தெரியுமே இப்படி நடக்கும் என்று" எனத் தான் ஒவ்வொருவரும் சொல்லிக் கொண்டு திருப்தி யடைவார்கள். அவ்வாறு திருப்தி யடையும்படியான சந்தர்ப்பங்கள் இப்பொழுது ஏற்பட்டிருக்கின்றன.

இரு செய்திகள்

சென்ற வாரம், திடீரென ஒரு நாள் காலைப் பத்திரிகைகளில், "ஹிட்லர் உயிருக்கு உலை! ஆனால் ஹிட்லர் உயிர் தப்பினார்," "ஜெர்மனியில் ராணுவப் புரட்சி! புரட்சி சர்க்கார் அமைக்கப்பட்டது!", "ஜெர்மனியில் கொந்தளிப்பு! கிழக்கு பிரஷ்யாவில், ராணுவக் கலகமா?" "ஹிட்லர் கைது செய்யப்பட்டாரா?" என்ற செய்திகள் வெளியாயின.

அதே நாளில், "டோஜோவின் ஜப்பானிய மந்திரி சபை அப்படியே கூண்டோடு ராஜிநாமா செய்து விட்டது. கொரியாவின் கவர்னர் ஜெனரலான ஜெனரல் குனியாகி கொய்ஸோவையும், அட்மிரல் மிட்ஸுமாஸா யோனய் என்வரையும் அழைத்து புது மந்திரி சபை அமைக்கச் சொல்லி யிருக்கிறார் ஜப்பானிய சக்கரவர்த்தி. பற்றி எரியும் இந்த பயங்கரப் போரின் அனலை, ஏற்கெனவே இருந்த டோஜோவின் மந்திரி சபையில் உள்ளவர்களால் தாங்கி நிற்க முடிய வில்லை. யுத்தத்தை பூரண சக்தியுடன் ஒரு முடிவு வரை நடத்த வேண்டுமென்பதற்காகவே இந்த மாறுதல் செய்யப்பட்டது" என்ற செய்தியும் பத்திரிகைகளில் வெளியிடப் பட்டது.

எதிர் பார்த்ததே !

இந்த இரண்டு செய்திகளிலும் அடங்கிய விஷயங்கள் எதிர் பார்க்கப் பட்டவை தான். ஆனால், இவ்வளவு சீக்கிரமாக ஜெர்மனியிலே, இப்படி பகிரங்கமான கொதிப்பு ஏற்படும் என்று யார் எதிர்ப் பார்த்திருக்க மாட்டார்கள். ஆயினும், ஜெர்மனியை நாஸிஸம் எனும் பிசாசிடமிருந்து விடுவித்து, நாஸிஸத்தையே அதன் சிருஷ்டி கர்த்தாக்களோடு வைத்துப் பொசுக்கிச் சாம்பலாக்கி விட வேண்டுமென்று கங்கணம் கட்டிக் கொண்டு, ஜெர்மனிக்கும், அதைச் சேர்ந்த அச்சு நாடுகளுக்கும் எதிராக யுத்தத்தை நடத்தும் தலைவர்களில் சிலர், நல்ல தீர்க்க தரிசிகள் என்றே கூறவேண்டும். "நேசப் படைகளில் எதுவானாலும் சரி, அசல் ஜெர்மன் எல்லையை அணுகி விட்டால், ஜெர்மன் மக்கள் அதற்கப்புறமும் சும்மா இருக்கமாட்டார்கள். நிச்சயம் ஜெர்மனியில் கலகம் ஏற்படும்" என்று ஒருவர் சொல்லி யிருக்கிறார்கள். ருஷ்யத் தலைவர் ஸ்டாலினோ, அடிக்கடி "இரண்டாவது போர்முனையை ஆரம்பியுங்கள். அப்புறம் என்ன நடக்கிறது பாருங்களேன்!" என்று கூறி வந்திருக்கிறார்.

இப்பொழுது, ருஷ்யப் படைகளும் ஜெர்மனியின் கிழக் கெல்லையை அடைந்து விட்டன. நேச தேசப் படைகளும் மேற்கே இரண்டாவது போர்முனையை ஆரம்பித்து நன்கு மாதங்களாகப் போகின்றன. முன்னேற்றம் வேகம் குறைவாக இருந்தாலும், முன் வைத்த காலைப் பின் வைப்பதாக இல்லை. இந்தச் சமயத்திலே தான், ஜெர்மனியிலிருந்து கலகச் செய்தி, காற்றில் பறந்து வந்திருக்கிறது.

கிரகணம் பிடித்தது.

அன்று சூரிய கிரகணம். அதே நாளில் தான், ஹிட்லரையும் கிரகணம் பிடித்திருக்கிறது. அவரது உடம்பிலே சில பாகங்களில் நெருப்புப்பட்டுக் கருகி விட்டதாம். "சீமையிலிருந்து வரவழைக்கப் பட்ட சுரங்க வெடி தான் ஹிட்லரின் உயிரை மாய்க்க ஒளித்து வைக்கப் பட்டிருந்தது. ஒரு ருஷ்ய யூதன் அதை வரவழைத்தான். அதை பிரிட்டிஷ் பிரபுக்கள் "சப்ளை" செய்தார்கள். ஜெர்மன் பிரபுக்கள் சிலர் அதை உபயோகித்தார்கள். "அயோக்கிய நாய்கள்" என்று ஜெர்மனியிலே தொழிலாளர்களை மேய்க்கும் தலைவர் டாக்டர் லே என்பவர் சொன்னாராம்.

ஹிட்லருக்கு ஆறேழு அடி தூரத்திற்குள்ளாகவே வெடி வெடித்ததாம். அவரது மெய்ப் பாதுகாப்பாளர்கள் சிலருக்கு பலத்த காயமாம். சிலருக்குச் சொற்ப காயமாம். இந்த சம்பவத்திற்குப் பிறகு, ஹிட்லர் ஒன்றுமே நடவாதது போல் தனது வேலைகளைக் கவனிக்கப் போனாராம். முஸோலினிக்குச் சொல்லியனுப்பினாராம். அவரோடு வெகுநேரம் பேசினாராம். அவரைக் கட்டிக் கொண்டு அழுது தீர்த்தார் என்று சொல்லி யிருந்தால் சரியாக இருந்திருக்கும்.

ஹிட்லர் புலம்பல் !

'ஐயோ முஸோலினி! நம்முடைய கதி இப்படியா ஆக வேண்டும். உம்மைத் தவிர வேறு யாரிடம் நான் என் கஷ்டத்தைச் சொல்லி அழுதாலும் பரிகசிப்பார்கள். நீர் அநுபவசாலியாயிற்றே என்று உம்மிடம் இந்த அவதியைச் சொல்லுகிறேன். என்னைச் சேர்ந்த பசங்களே எனக்கு வெடி வைக்கப் பார்த்தார்களே! உம்மைச் சேர்ந்தவர்களும் இப்படித் தானே திடீரென உம்மைக் காலி வாரி விட்டார்கள்; அயோக்யப் பயல்கள். இந்தக் காலத்திலே யாரையும் நம்பவே முடியவில்லை ஐயா! எனக்கு இருந்த மதிப்பென்ன? ஹிட்லர் என்றாலே அழுத பிள்ளையும் வாயை மூடிக் கொள்ளுமே! என்னை ஆண்டவனுக்கும் உயர்ந்த ஸ்தானத்தில் அல்லவா ஜெர்மன் மக்கள் வைத்திருந்தார்கள்! நான் இட்ட கட்டளையை மீற எவனும் இது வரை துணிந்ததே இல்லையே! எனது திட்டப்படி ஆதியிலே வெற்றிகள் வந்து குவிந்து கொண்டிருந்தபோது, எல்லோரும் சந்தோஷக் கடலில் ஆழ்ந்தார்களே! ஏதோ எக்கச்சக்கமாகப் போய்விட்டது. நீரும், உமது ஆட்களும் வட ஆப்பிரிக்காவிலும், சிஸிலியிலும், இத்தாலியிலும் கோட்டை விட்டு விட்டீர்கள். அன்றிலிருந்தே ஏழரை மேல் ஏழரையாக வருவது போல், கேட்கச் சகிக்காத செய்திகளே வந்து கொண்டிருக்கின்றன. எங்கிருந்தோ சனியன்கள் மாதிரி இந்த அமெரிக்கர் வந்து, ஏகமாக உதவிகளை அளித்து, நேச தேசங்களின் கைகளைப் பலப்படுத்தி விட்டார்கள். அவர்கள் என்னடா என்றால், ஜெர்மனிக்கு ஜீவ நாடிகள் போலிருக்கும் தொழிற்சாலைகளையும், ஆயுத உற்பத்தி சாலைகளையும், தூளாக்கலானார்கள். ருஷ்யப் போரிலே எதிர் பாராத நஷ்டங்கள் ஏற்பட்டு விட்டன. எங்கேயோ கோளாறு இருந்திருக்கிறது தெரிவில்லை. இத்தாலியிலும், ருஷ்யாவிலும் இடிகள் விழும் பொழுது, மேற்கேயும் ஓட்டை விழுந்து விட்டது. இதனையும் ரகசியமாக வைத்துக் கொள்ளலாமென்றாலோ, அதற்கும் வகை யில்லாது போய் விட்டது. நமது எதிரிகள் குண்டுகளை மட்டும் வீசினால் தேவலையே! நமக்கேற்படும் தலைவலிகளை யெல்லாம் ஜபிதாவாகச் சேர்த்து, அச்சிட்டு, ஆகாயத்திலிருந்து கொட்டுகிறார்கள். நம் ஊர்க்காரர்களும் புத்தியில்லாது அவற்றை எடுத்து வாசித்திருக்கிறார்கள். எல்லாமே இப்பொழுது அழுகலாகி விட்டது. நானும் என்ன தான் செய்வேன்? நான் ஒருவனே எத்தனை காரியங்களைத் தான் கவனிக்க முடியும்? ராணுவத்திற்கு நல்ல பயிற்சி அளித்தேன். நிறைய ராணுவத் தலைவர்களைத் தயாரித்தேன். அவர்களை நம்பித் தானே யுத்தத்தை நடத்த வேண்டும்? அவர்களே என்னை மோசம் செய்து விட்டாங்களய்யா! என்னால் முன்னுக்குக் கொண்டுவரப்பட்ட பயல்களே என்னுயிரை வாங்கப் பார்த்திருக்கிறார்கள். இதை விட மோசமான காரியம் ஏதாவது இருக்க முடியுமா? இனி மேல் யாரை நம்புவது என்றே எனக்குத் தெரியவில்லை. கடவுளைப் பற்றிக் கூட ரொம்ப உயர்வாகப் பேசிப் பார்த்துவிட்டேன். நான் எனது லக்ஷ்யத்தை அடைய அவர் உதவுவார் என்றும், ஜெர்மனியின் ஆசையை அவர் நிராசை யாக்கமாட்டார் என்றும் சொல்லிப் பார்த்தேன். அதுவும் பிரயோஜனப் படவில்லை. இப்பொழுது எனது எதிரிகள் எல்லாம் பார்த்துச் சிரிக்கும்படியாகவும், மகிழ்ச்சியடையும்படியாகவும் செய்து விட்டார்கள் என்னோடேயே இருந்து, எனது ரகசியங்களை யெல்லாம் அறிந்த சிலர். இந்தச் சம்பவத்தால், ஜெர்மனிக்கிருந்த மதிப்பே போய் விட்டது. எனது ராணுவத்திற்குள்ளே இன்னும் என்னென்ன கலவரங்கள் நடக்கப் போகின்றனவோ யார் கண்டார்கள்? விஷயங்கள் நடக்கிற தினுஸைப் பார்த்தால், எனக்கு ஒன்றுமே பிடிக்கவில்லை!' என்று புலம்பித் தீர்த்திருப்பார்.

(11-ம் பக்கம் பார்க்க)

யுத்த காலத்தில் அரசாங்க உதவி

சேலம் "ரேஷன் டிப்போ"க்கள் மூலமாக உணவு தானியங்கள் தட்டின்றி கிடைத்து வருகின்றன.

சேலம் கலெக்டர் ஆபீஸில் வழக்கம் போல் ஏழைகளுக்குப் பிரதி தினமும் அன்ன மளிக்கப்பட்டு வருகின்றது.

ஜில்லா ராணுவ போர்டும், தேசீயப் போர்முனை ஊழியர்களும் சிப்பாய்களின் குடும்பத்தாருக்கு வேண்டிய உதவிகளைப் புரிந்து வருகிறார்கள்.

ஓமலூர் தாலூகாவிலுள்ள கிராமங்களிலும் ஓமலூரிலும் தாலூகா விற்பனைக் கமிட்டியின் மூலமாக உணவுப் பொருள்கள் நியாயமான விலைக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன. இத் தாலூகாவிலுள்ள கிராமங்களில் கூலி வேலை செய்பவர்களுக்கு தானியங்கள் ரூபமாகவே கூலி வழங்கப்பட்டு வருகின்றது.

திருச்செங்கோடு தாலூகாவிலுள்ள உணவு தானிய டிப்போக்கள் மூலமாகவும் கூட்டுறவு விற்பனை சங்கங்கள் மூலமாகவும் உணவு தானியங்கள் நியாயமான விலைக்கு அநேக இடங்களில் தட்டின்றி கிடைக்கின்றன.

நாமக்கல்லில் தாலூகா ராணுவ போர்டு அங்கத்தினர்கள் 1944-ம் வருஷம் ஜுலை மீ 11உயில் கூடி சிப்பாய்களின் குடும்பத்தார்கள் குறைகளைப் பற்றி விசாரித்து அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்து வருகிறார்கள். வழக்கம் போல் நாமக்கல்லிலும் ஏழைகளுக்குப் பிரதிதினமும் அன்னமளிக்கப்பட்டு வருகிறது.

தெங்கினிக்கோட்டை ஸப்-தாலூகாவிலுள்ள அநேக கிராமங்களில் சர்க்கார் தரிசு நிலங்களில் தீர்வையின்றி உணவு தானியங்கள் பயிரிட அநேக குடிகளுக்கு சர்க்காரால் அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது.

அநேகமாக எல்லா ஊர்களிலும் மண்ணெண்ணெய், விறகு, சர்க்கரை முதலியவை அதிகக் கஷ்டமின்றி கிடைத்து வருகின்றன.

(8-ம் பக்கம் தொடர்ச்சி)

நிதிக்கு ஆயிரக்கணக்காக தர்மமாகக் கொடுத்து உதவும்படி தூண்டப்படுகிறார்கள். கொடுக்கவும் செய்கிறார்கள். 6 லக்ஷ ரூபாய் செலவில் ஆரம்பித்த ஒரு நூல் மில்லானது **வருஷம்** 6 லக்ஷ ரூபாய் லாபம் அடைந்த நிலையில் சென்ற வருஷம் அதிக லாபவரி என்றும் கட்டாய இருப்பு என்றும் அமித லாபத்தில் நூற்றுக்குத் தொண்ணூறுக்கு மேல் சர்க்காரிடமே திரும்பவும் பணம் செல்லும்படியாக வழி செய்யப்பட்டிருக்கிறது. சர்க்கார் திட்டங்களில் நூற்றுக்கு 20 ரூபாய் லாபத்துக்கு யாருக்கும் கவலையில்லை. நூற்றுக்கு 400, 500 சம்பாதிக்கணும் என்று திரிபவர்களைத் தடுத்துத்தான், எத்தனையோ வழிகளில் எத்தனையோ கட்டுத் திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இன்னும் நிறைந்த சொத்துக்காரர்களுக்கு மரண வரி என்றும், அதி படியரன வருமான வரி என்றும், மத்திய சர்க்கார் களால் வரிகளென்றும் இயற்கையாக நிறைந்த லாபம் திரட்டும் இடங்களிலெல்லாம் சர்க்கார் கை வைத்திருக்கிறார்கள்.

சேமிப்பு முறைகள்

இவையெல்லாம் வரிகளாகப் பறிக்கப்பட்ட தொகைகள். இனி சாமான்ய ஜனங்களிட மிருந்து நோட்டுப் பெருக்கத்தை அலை கட்டுவதற்காக சர்க்கார் கட்டாயமாக, நேரடியான வரி மூலம் பணத்தை பறிக்கிறதில்லை. ஆனால் கூடியமட்டும் செலவைக் குறைத்து, எதிர்காலத்துக்காக மிச்சம் பண்ண வேண்டுமென்று, பலவிதமான சேமிப்பு முறைகளை ஏற்படுத்தி விடா முயற்சியாக சர்க்கார் பிரசாரம் செய்து வருகிறார்கள்.

நாணய விக்கமும் விலைகள் குறைவும்

சேமிப்புத் திட்டம் எதுவாயிருக்கட்டும், அவற்றில் நாம் பணம் போடும் போது சர்க்காருக்கு அதை வரியாகக் கொடுப்பதில்லை. தர்மமாகவும் கொடுப்பதில்லை. முதல் காரியம் சண்டை முடியுமட்டும் அந்தப் பணம் புழக்கத்தில் இல்லாமல் இரகிக்கப்படுகிறது. நாம் கொடுக்கிற அளவுக்கு, மேற்கொண்டு நோட்டு அடிக்காமல் சண்டை முடியும் வரை நமது பணமே மறுபடியும் புரண்டு கொண்டிருக்கும். அந்த அளவுக்கு நாணய வீக்கம் குறைய, விலை வாசிகளும் குறைய ஏதுவாகும். பல துளி பெருவெள்ளம். சாமான்ய ஜனங்களை இந்தியாவின் ஜனத்தொகையில் ¾ பங்கு என்று வைத்துக் கொள்வோம், குறைந்த பக்ஷம் ஒவ்வொருவரும் மாதம் ஒரு ரூபாய் சேமித்து வைத்தால் கூட, வருஷம் 12 ரூபாயாச்சு. 40 கோடி ஜனத்தொகையில் 30 கோடிக்கு, வருஷம் 12×3, 36, 36 கோடியாச்சு. போன வருஷம் ஜனவரியிலிருந்து செப்டம்பர் வரை 17 கோடி ரூபாய்க்கு நோட்டு அடித்திருக்கிறார்கள். ஆள் ஒன்றுக்கு மாதம் ஒரு ரூபாய் சர்க்கார் சேமிப்புத் திட்டத்தில் எல்லாரும் போட்டாலுங் கூட 36 கோடிக்கு. 2 வருஷத்துக் கணக்குச் சரியாச்சு. விலைவாசி தலைகீழாக விழுந்து விடாதா, என்ன?

இன்னொரு காரியம். வாழ்க்கைக்கு அவசியமானவைகளை எப்படியும் வாங்கி விடுகிறோம். வாங்கித்தான் ஆக வேண்டியிருக்கிறது. நாகரிக சொகுசுப் பொருள்களையாவது நாம் குறைக்க வேண்டும். ஒரு காரியம். ஒரு ரூபாயைக் கொடுத்து முன்னே 6 அணாவுக்கு விற்ற பொருளை அடித்து மோதிக்கொண்டு வாங்குவானேன்? நாளைக்கு சண்டை முடிந்தபின் சண்டைக்குப் போயிருக்கிறவர்களெல்லாம் திரும்பி வந்து, எல்லாரும் ஜில்லா கலெக்டராகவா ஆகிவிடப் போகிறார்கள்? அவனவன் தொழிலுக்குப் போய் அமருவான்; நிறையச் சாமான் கிடைக்கும், சல்லிசாகவும் கிடைக்கும். அப்பொழுது வாங்கிக் கொள்கிறது கண்ணாடியும், பீரோவும், தோல் பெட்டியும், ரேடியோவும். நியாயமாய்ப் பார்த்தால், நம்முடைய மக்கள், ஊரார், அண்ணன் தம்பி வீட்டைவிட்டு, காட்டிலும் மேட்டிலும் போய் சண்டை செய்து கொண்டிருக்கும் போது அவர்களுக்குக் கொஞ்சம் சிரம பரிகாரமாக இருக்கக் கூடிய ஒரு கம்பளியாகட்டும், பானமாகட்டும், இவைகளுக்கு நாம் போட்டியிடுவதென்றால் தர்மமே அல்ல.

இப்பொழுது ஏதோ அதிக வருமானம் கிடைக்கிறவர்கள் கொஞ்சம் பிரயாசைப்பட்டு, தேவைகளைக் குறைத்துக் கொண்டு பணத்தைச் சேமித்து வைக்காதே போனால், பிறகு யுத்தம் முடிந்த பிறகா சேமித்து வைக்கப் போகிறோம்? அப்பொழுது எங்கிருந்து ஏறிய வரும்படி கிடைக்கும்? ஊரெங்கும் சகலமும் மலிவாயிருக்கும். நம்முடைய கையில் காசிராது!

எல்லாம் தேச நன்மைக்கே

சர்க்கார் சேமிப்புத் திட்டங்களில் பணம் போடச் சொல்லுகிறார்கள். யுத்தம் முடிந்து சிறுகச் சிறுக அவற்றை மீட்டுக் கொள்ளலாம். சில பாண்டுகள் 1951—54-ல் மீட்கலாம். சில 1953—55-ல் பணம் கிடைக்கும். இன்னும் சில 1946க்கே குறிக்கப்பட்டிருக்கின்றன. 1966—68 கடன் பத்திரங்களும் உண்டு. யுத்தம் முடிந்த பின்னர் அந்தந்தப் பத்திரங்கள் சிறுகச் சிறுக மீட்கப்படும் வரை சர்க்கார் தம் கையிலுள்ள பொது மக்கள் பணத்தை நாட்டின் முன்னேற்றத்துக்காக, ரோடுகள் ரயில் பாதைகள் போட, மிஷின் செய்யும் பெரிய தொழிற் சாலைகள் நிறுவ, மின்சார சக்தியை அபிவிருத்தி செய்ய, கப்பல் தொழிலைப் பெருக்க, விவசாயத்துக்கும், தொழிலுக்கும் ஜீவாதாரமான ரசாயன அமிலங்கள், உப்புகள் பெருவாரியாக உற்பத்தி செய்ய, இன்னும் பல வகைகளில் வெளி நாட்டாரை எதிர் பாராமல் நாமே மற்ற மற்ற நாடுகளைப் போல் தொழிலில் அபிவிருத்தியடைந்து, அரைப் பட்டினியும் முழத் துண்டுமென்ற தரித்திரத்திலிருந்து மீட்டேறி, உலக மக்களிடையே நாமும் செல்வம் படைத்து, மதிப்புற்று, கௌரவமாக வாழ, எல்லாம் தேச நன்மைக்குத் தானே உதவப் போகிறது, நாம் சேமித்து வைத்தால். ஆகையால் சர்க்கார் பிரசாரம் பண்ணுகிறார்கள். ஆகையால் இதில் ஏதோ விஷம் இருக்கிறது என்று வீண் பயத்தலோ, அசம்பந்தத்தாலோ அல்லது அறியாமையாலோ சும்மா இருந்து விடாமல், கூடிய மட்டும் தேவைகளைக் குறைத்து பணத்தைச் சேமித்து வைப்போம்.

[சமீபத்தில் திருச்சி ரேடியோவில் ஒலி பரப்பப்பட்ட பிரசங்கம்.]

(9-ம் பக்கம் தொடர்ச்சி)

'மொண்டி' முஸோலினி !

அதற்கு 'மொண்டி' முஸோலினி என்ன ஆறுதல் சொல்லியிருக்கப் போகிறார்! 'த்சு, த்சு, த்சு, த்சு, த்சு! அக்ரமம்! அநியாயம்!' என்று ஒவ்வொரு வார்த்தைகளாக உதிர்த்திருக்கப் போகிறார். அவ்வளவு தான். அந்த மனுஷன் செய்த அசட்டுத் தனத்தினால் தானே, யுத்தம் இத்தாலி வழியாக, தென் ஜெர்மனியை எட்டிப் பார்க்க வந்திருக்கிறது! முஸோலினியால் இப்பொழுது தமபிடிக்குக் கூடப் பிரயோசனமில்லை.

இதன் அர்த்தம் என்ன ?

ஹிட்லர் புலம்பியது ஒரு புறமிருக்கட்டும். ஜெர்மனியில் இன்னும் நடந்தவற்றைக் கவனிக்கலாம். கிழக்கு பிரஷ்யாவில் இரண்டரை லக்ஷம் நாஜிகளிருக்கிறார்களாம். அவர்களை யெல்லாம், ஆபத்து வரும்பொழுதும், இருந்த இடத்திலேயே அசையாதிருக்கும்படியாக உத்திர போட்டிருக்கிறார்களாம் ஹிட்லரைச் சேர்ந்தவர்கள். இம்மாதிரி இருப்பதால் இன்னொரு ஸ்டாலின் கிராட் நாடகம் நடக்கக் கூடும். நாஜி படை முழுவதும் அழியும் வரை போர் ஏதாவது ஒரு குறிப்பிட்ட பிரதேசத்திலே நடக்கக் கூடும். அதனால் ருஷ்யர்களுக்கும் சேத மிருக்கும். ஆனாலும், அந்தப் போரின் முடிவை முன் கூட்டியே சிறு குழந்தை கூடச் சொல்லி விடுமே! இம்மாதிரி எல்லோரையும் சாக அடிக்க ஹிட்லரும் அவரது ஆட்களும் தீர்மானித்திருக்கிறார்கள் என்பது தெரிந்ததே, பிரஷ்யாவில் ராணுவம் கலகம் செய்திருக்கலாம். இது மட்டு மின்றி, வேறு பல நகரங்களில், ராணுவத்தாருக்கும், நாஜி போலீஸ் படைகளுக்கும் இடையிலே கலவரம் ஏற்பட்டிருக்கிறதாம். ஒருவரையொருவர் துப்பாக்கியால் சுட்டுக் கொண்டார்களாம். இவற்றின் அர்த்தமென்ன ?

பிடிக்கவே யில்லை

ஹிட்லர் செய்யும் காரியங்கள் ஜெர்மானியருக்குப் பிடிக்க வில்லை என்பது தான் இதன் அர்த்தம். ஹிட்லரைப் பதவியிலிருக்க விடுவதால், ஜெர்மனி பொசுங்கிப் போகும்; ஆகவே, தலைமைப் பதவியைத் தாங்கள் கைப்பற்றிக் கொண்டால், அப்புறம் எப்படியாவது ஒரு வகையாக யுத்தத்தை முடித்துக் கொள்ளலாம் என்று சில முரட்டு ராணுவ அதிகாரிகள் எண்ணியிருக்க வேண்டும்.

கல்தா பெற்றவர்கள் வேலை

இன்னொரு விஷயம். மேற்குப் போர் முனையிலும், கிழக்குப் போர் முனையிலும் இத்தாலியிலும் பெரிய சேனாதிபதிகளாக இருந்த சிலரை, மண்டையி லடித்து, "நீ ஒன்றிற்கும் உருப்படாத ஆள்! வா திரும்பி ஊருக்கு! நீ யுத்தத்தை நடத்திய லக்ஷணம் ரொம்ப அழகாக இருக்கிறது!" என்று சொல்லுவது போல், வேலையிலிருந்து அகற்றி விட்டார் ஹிட்லர். அவர்களுக் கெல்லாம் ஆத்திரம் கொதித்துக்கொண்டு தானே இருக்கும்? இப்பொழுது ஹிட்லர் உயிரை வாங்க ஏற்பட்டான சதியிலே, மேற்கண்ட மாஜி சேனாபதிகள் சிலரும் கலந்திருந்ததாகத் தெரிகிறது.

யுத்தத்தின் போக்கை மாற்றவேமுடியாது

ஆனாலும், ஜெர்மன் மக்களுக்கு ஆத்திரமூட்டக் கூடிய காரியங்களையே தான் ஹிட்லர் செய்து வருகிறார். வெற்றி என்ற பேச்சுக் கூட இனி ஜெர்மானியர் செவிகளிலே விழப் போவதில்லை. பூரண முடிவு என்று வரப்போகிற தெனக் காத்திருப்பதைத் தவிர, அவர்களுக்கு வேறு கதி ஏது மில்லை. இனி ஹிட்லரில்லை அவரது தாத்தா வந்தாலும், யுத்தத்தின் போக்கை மாற்ற முடியாது. ஹிட்லரது உயிருக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்திருந்தால், யுத்தத்தின் முடிவு சமீபத்திலிருக்கலாம். ஜெர்மனியில் கலவரம் ஏற்பட்டிருக்கிறது என்பது வெறும் சரடாக இல்லாதிருக்குமானால், அதுவும் யுத்த முடிவைத் துரிதப் படுத்தலாம்.

அலங்கோலமே !

மேலும் மேலும் பாய்ந்து வரும் குண்டுகளை லக்ஷியம் செய்யாது, "வாழ்க ஹிட்லர்" என்ற ஜே கோஷத்தோடு நாஜி வீரர்கள் பீரங்கிகள் மீது போய் விழுந்து, தங்கள் எதிரிகளும் கண்டு கலங்கும்படியாகப் போரிட்ட காலம் என்ன? இப்பொழுது, நேச தேச பீரங்கிகளையும், ருஷ்ய குண்டுகளையும் சமாளிக்க முடியாது, பின் வாங்கும் அலங்கோலம் என்ன ?

இப்பொழுது எந்தப் போர் முனை முக்யமானது என்று ஹிட்லரால் தீர்மானிக்க முடியவில்லை. எதைப் பார்த்தாலும் முக்கியமாகவே இருக்கிறது. அத்தனை போர் முனைகளுக்கும் அனுப்ப, போதிய ஆள் பலமில்லை. ஆள் இல்லாமலோ ஒன்றும் செய்யமுடியாது. ஆகவே, அவர் ஜெர்மனியிலும், ஜெர்மனி பிடித்துள்ள நாடுகளிலும், யுத்தம் புரிவதற்கு லாயக்காக உள்ளவர்களனைவரையும் கட்டாய ராணுவ சேவைக்கு அழைக்க உத்திர விடும்படி கொப்பல்ஸ் துரையிடம் சொல்லி விட்டாராம்.

நோக்கமென்ன ?

ஹிட்லரின் நோக்கம், இதிலிருந்து, என்னவாக இருக்கும் என்று தெரிகிறது. கடைசியாக ஒரு கை பார்த்து விடுவது என்று தீர்மானித்துவிட்டார் போலிருக்கிறது. அவர் ஜெர்மனியின் ஆள்பலத்தை யெல்லாம் திரட்டி, முப்புறங்களிலிருந்து, பொங்கிவரும் நேச எதிர்ப்பைச் சமாளிக்க முயலலாம் அவர்.

அதிலே வெற்றி கிட்டாது போலிருந்தால், ஆளற்றுப் பறக்கும் விமானங்களைப்போல், ஏதாவது நூதன கோர ஆயுதங்களைப் பிரயோகிக்கலாம். தன்னைக் கொல்ல முயன்றவர்களையும், அவர்களைப் போன்ற எண்ணமுள்ளவர்களையும் ஹிட்லர் கூசாது தூக்கில் போட உத்திரவிட்டு விடுவார். ஜெர்மனியிலும், ஜெர்மனி பிடித்த நாடுகளிலும் பயங்கர ஆட்சி பிரமாதமாக நடக்கும். ஜெர்மனி சுட்டு சாம்பலாக்கப் படும் வரை, நேசப் படைகள் பெர்லினில் நுழைந்து தங்கள் கொடிகளைப் பறக்கவிடும்வரை, ஹிட்லர் யுத்தத்தை நடத்தக் கூடும். அந்த நாள் வெகு தூரத்திலிருக்கும் என்று தோன்றவில்லை.

ருஷ்யர்கள் வார்ஸாவிலிருந்து 50 மைல் தூரத்திலிருக்கிறார்கள். ருஷ்ய மண்ணை மீட்பதற்கான போர் முடிந்து விட்டது. இனி நாஜி மண்ணைப் பறிக்கத் தானே யுத்தம் நடக்கவேண்டும்? அந்த யுத்தமுஞ் சரி, மேற்குப் போர் முனைப் போரும் கடினமாகவே இருக்கலாம். யுத்தம் என்றால் அல்வா சாபிடுகிற மாதிரி இருக்கும் என்று யார் சொன்னார்கள் ?

ஜப்பானியர் பிழைப்பு

ஹிட்லரைக் கண்டு மயங்கும் ஜப்பானியர் பிழைப்பும் ஒன்றும் பிரமாதமாக இல்லை. அங்கே டோஜோ மந்திரி சபை, தனது கடையைக் கட்டிக்கொண்டு வெளியேறி விட்டது. கொரியாவிற்கு கவர்னர் ஜெனரலாக இருந்த ஒரு ஐயாவையும், 193 -க்குப் பின் ஒரு அற்பாயுசு மந்திரி சபையின் தலைவராக இருந்த ஒரு கடற்படைத் தலைவரையும் அழைத்து, ஜப்பானிய சக்கரவர்த்தி மந்திரி சபை ஒன்றை அமைக்கச் சொன்னார். புது மந்திரி சபை, இந்த யுத்தத்தை இன்னும் பலமாக நடத்தப் போகிறதாம்.

இந்தியாவிலே, இம்பால் அருகிலிருந்த ஜப்பானியர் அனைவரும் வாலிலே ஓலை கட்டி விரட்டப் பெற்றுவிட்டார்கள். எங்கும் அவர்களது ஓட்டமாகவே இருக்கிறது. மழை, கிழை ஒன்றையும் நம்மவர்கள் பார்க்கவில்லை.

எங்கும் உதை !

சைபான், நியூகினியா, காரலைன் தீவுக ளருகே எல்லாம் ஜப்பானியர் நல்ல உதை வாங்குகிறார்கள். அமெரிக்கர்கள், ஆதியில் தங்களுக்குச் சொந்தமாக இருந்த க்வயாம் தீவுகளிலும் போய் இறங்கிவிட்டார்கள். இங்கிருந்து பிலிப்பைன்ஸ் தீவுகள், ஜப்பான் எல்லாம் எட்டக்கூடிய தூரத்தில் தானிருக்கின்றன. அமெரிக்கா தனது கப்பற் படை பலத்தையும் அதிகமாக்கி, ஐரோப்பாவிற்குப் போயிருக்கும் வீரர்களின் வரவை எதிர்பாராது புதுப்படைகள் சேர்த்து அனுப்ப திட்டம் போட்டிருக்கிறது. ஆகவே, ஜப்பானுக்கு சீக்கிரமே முடிவுகாலம் நெருங்கலாம். அதனால்தான், ஜப்பானிய சர்க்கார் உஷாராகியிருக்கிறது.

மொத்தம் லாபம் தான் !

மொத்தத்தில் எங்குமே மேகங்கள் கலைகின்றன. நமக்குச் சாதகமாகவே எல்லா இடங்களிலும் காரியங்கள் நடக்கின்றன. ஆனாலும், இனியும் நடக்க வேண்டிய கடும் போர்கள் பல இருக்கின்றன. அவற்றிலும் அதிகச் சேதம் ஏற்படாது பகவான் காப்பாற்றிவிட்டால், எதிர்பார்த்த முடிவு இன்பமாகவே இருக்கும் என்பதில் சந்தேகமே இல்லை.

யுத்த நாட் குறிப்புக்கள்

பிரிட்டனும் ஜெர்மனியும்.

ஜூலை 20.—சில ஜெர்மன் உத்தியோகஸ்தர்கள் ஹிட்லரைக் கொல்ல முயற்சித்தனர். அம்முயற்சி பலிக்கவில்லை. அவர்கள் வீசிய வெடிகுண்டு ஹிட்லருக்கு வலது புரத்தில் 6 அடிகளுக்கப்பால் வெடித்தது. 6 ஜெனரல்களும் 2 அட்மிரல்களும் காயப்பட்டனர். இந்தச் சம்பவத்தைக் குறித்து ஹிட்லர், கோயரிங், அட்மிரல் டூயனிட்ஸ் ஆகியோர் பேசினார்கள்.

ஜெர்மன் உள் நாட்டுப் படையின் பிரதம படைத் தலைவராக ஹிம்லர் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

ஜூலை 21.—ஹிட்லர் கைதியாகிவிட்டதாகவும் ஜெர்மனியில் உள்நாட்டுக் கலகம் ஆரம்பமாகிவிட்டதாகவும் ஒரு அங்காரா செய்தி கூறுகிறது.

தன்னைக் கொல்ல முயற்சிக்கப்பட்டது பற்றி ஹிட்லர் செய்த பிரசங்கத்தைக் குறித்து அமெரிக்க மந்திரி மிஸ்டர் கார்டெல் ஹல் குறிப்பிட்டுப் பேசியபோது, அவரைத் தாக்கியதும், அதை விளக்கி அவர் பேசியதும், சமீபத்தில் ஜெர்மனிக்கு ஏற்படப்போகும் தோல்வியையும், ஜெர்மன் யுத்த சபையோருக்குள்ள பீதியையும் எடுத்துக் காட்டுகிறது என்று கூறினார்.

ஜூலை 25.—சமீபத்தில் ஜெர்மனியில் நிகழ்ந்த சம்பவங்களைக் குறித்து, தான் அறிக்கை எதுவும் விடுக்கக்கூடிய நிலைமையிலில்லை என்று காமன்ஸ் சபையில் மிஸ்டர் ஈடன் கூறினார்.

ஜெர்மனியிலும் ஜெர்மன் வயப்பட்ட நாடுகளிலும் உள்ள அனைவரும் படையில் சேர வேண்டுமென்று ஹிட்லர் ஒரு கட்டளை பிறப்பித்திருக்கிறார்.

அமெரிக்காவும், அட்லாண்டிக்கும்.

ஜூலை 20.—அமெரிக்கத் தலைவர் பதவிக்கு நடைபெறும் தேர்தலில், ஜனநாயகக் கட்சி அபேட்சகராக ப்ராங்கிலின் டி. ரூஸ்வெல்டை 4-வது முறையாக நியமித்திருக்கிறார்கள். இது பற்றி மிஸ்டர் ரூஸ்வெல்ட் ஒரு வானொலிப் பிரசங்கம் செய்தார்.

ஜூலை 21.—அமெரிக்க உபதலைவர் பதவிக்கு செனட்டர் ஹாரி ட்ரூமானை ஜனநாயகக் கட்சியார் நியமித்திருக்கின்றனர்.

இந்தியா, பர்மா, இலங்கை.

ஜூலை 18.—காக்கினோவி லிருந்து 2 மைல் தூரம் நேசப் படைகள் முன்னேறி தினுங்கையைக் கைப்பற்றின.

ஜூலை 19.—சோகாக்கை நேசப்படைகள் கைப்பற்றின.

ஜூலை 22.—நூஷோராங், புங்கன் இவ்விரண்டிடங்களையும் சிண்டிட் படைகள் கைப்பற்றின.

ஜூலை 25.—பலேலை யடுத்து 8, 9 மைல்களுக்குட்பட்ட 7 குன்றுகளை நேசப் படைகள் கைப்பற்றின.

ரஷ்யாவும் பின்லாந்தும்.

ஜூலை 18.—ஒரு பெரும் படை க்ராட்னோவிலிருந்து கிழக்குப் பிரஷ்யாவை நோக்கிப் போனபோது, கோவெல் பகுதியில் ஒரு பெருந் தாக்குதலை நேசப் படைகள் ஆரம்பித்தன. கொரகோவ், லொகாக்ஸி, ரெட்சிகோவ், ப்ரோடி, ஷ்லொம்கா, பஸ்க், கமியோங்கா, சுராஸ்னோயி, சோலொயோல், ஜெசிர்னா, ஸப்லாட்ஸ், பெராஸ்டோவிட்ஸா, கவ்ரோங்கா, அன்டபோல், க்ராஸ்மொகொரோட்ஸ்கயா, மற்றும் 750 இடங்களையும் சோவியத் படைகள் கைப்பற்றின.

ஜூலை 19.—சோகல் மாஸ்டி, வலிகி, க்லெஸ்கேலி, ஷானினோ, எரினெவோ, மற்றும் 700 இடங்களை ரஷ்யப் படைகள் கைப்பற்றின.

கர்ஸான் அரணை சோவியத் படைகள் கடந்துவிட்டன.

ஜூலை 20.—ரத்னோ, மெலொரிடா, லுபோமில், ஓபலின், வ்லாடிகிர், வரலின்சிகி, ராவா ரஸ்கா, க்லிமெனி, ப்ரெஸிமிஸ்கியானி, டொரெஷேவ், கோப்ரின், மற்றும் 800 இடங்களை சோவியத் படைகள் கைப்பற்றின.

ஜூலை 21.—ஆஸ்ட்ரோவ், வாலின்ஸ்க், பக்ஸாக்ஸ், சொலேனிகி, கொஸோவோ, டிவின், ஷாட்ஸ்க், மற்றும் 300 இடங்களை ரஷ்யப் படைகள் கைப்பற்றின.

ஜூலை 22.—கோல்ம், பொனிவேஷ், இவ்விரண்டிடங்களையும் சோவியத் படைகள் கைப்பற்றின. ப்ரோவுக்குள் ரஷ்யப் படைகள் நுழைந்தன மற்றும், க்ரஸ்லாவா, க்ரிம்கி, செம்யாடிச்சி, கமனடோ, டொமலோ, லுபேசியூ, நமிரோ, மகெரேவ், கொரெனோக் முதலிய 400 பட்டணங்களையும் கைப்பற்றின.

ஜூலை 23.—யுத்தத்திற்கு முன்பு ரஷ்யாவுக்குச் சொந்தமாயிருந்து இன்னும் ஜெர்மானியர் வசமிருக்கும் ஒரே நகரமான பஸ்கோவையும் ரஷ்யர்கள் கைப்பற்றினார்கள்.

ஜூலை 24.—லப்லினை வில்கோரே, ரொகெடின், காலிச், சொகோல்கி முதலிய 1,000 இடங்களை ரஷ்யப் படைகள் கைப்பற்றின.

ஜூலை 25.—ஒரு நேச நாட்டிற்குள் புகுவது போலத்தான் ரஷ்யப் படைகள் போலந்துக்குள் புகுந்தனவென்று சோவியத் அரசாங்கம் கருதுவதாக சோவியத் அரசாங்க அறிக்கை யொன்று கூறுகிறது.

இத்தாலி, ஆப்பிரிக்கா, மத்தியதரைக் கடல் பகுதி.

ஜூலை 18.—லவேன், க்வாரெடா, அங்கோனா, அகுர்ஸியானோ, கமெரானோ ஆகியவற்றை நேசப் படைகள் கைப்பற்றின.

ஜூலை 19.—லெக்ஹார்னை அமெரிக்கப் படைகள் கைப்பற்றின. மோனெட் வர்டியை 8-ம் படையும், பான்டிடேராவை 5-ம் படையும் கைப்பற்றின.

ஜூலை 20.—சான்டுனேடோ, ரட்டா முதலிய பட்டணங்களை நேசப் படைகள் கைப்பற்றின.

ஜூலை 21.—மாண்டி குவெர்ச்சியா பெல்லா, மாண்டிசான் மைக்கேல் இவ்விரண்டையும் நேசப்படைகள் கைப்பற்றின.

ஜூலை 23.—பைசாவுக்குள் நேசப் படைகள் நுழைந்தன. சிட்டி டிகாஸ்டெல்லாவை அமெரிக்கப் படைகள் கைப்பற்றின.

ஜூலை 24.—மரினா என்னும் பட்டணத்திற்கு 5-ம் படை வந்து சேர்ந்தது. 8-ம் படை டெர்ரானோவாவைக் கைப்பற்றியது.

மாட்சிமை தங்கிய மன்னர்பிரான் சென்ற சனிக்கிழமை இங்கிலாந்தினின்று புறப்பட்டு மறு நாள் இத்தாலி வந்து சேர்ந்தார்.

விஷி, சுயேச்சை பிரான்சு, எதிரி வயப்பட்ட நாடுகள்.

ஜூலை 18.—அமெரிக்கப் படைகள் சென்ட் லோவைக் கைப்பற்றின.

ஜூலை 0.—பூர்குபஸ், ப்ரினோவில்லா, ப்ராஸ், ஹிபெர்ட்பரலி, ப்லூரி, கானி ஆகிய இடங்களை நேசப் படைகள் கைப்பற்றின.

ஜூலை 21.—சென்ட் ஆன்ட்ரு, சுர் ஆர்னி, ப்ரிமான்வில்லா, க்ரான்வில்லா, சேவ்ஸ், ரெய்ட்ஸ், ப்ரிங்னி ஆகியவற்றை நேசப் படைகள் கைப்பற்றின.

ஜூலை 22.—எமிவில்லாவையும் எடபாவையும் நேசப் படைகள் கைப்பற்றின. மால்டாட்டை மீண்டும் பிரிட்டிஷ் படைகள் கைப்பற்றிக் கொண்டன.

ஜூலை 23.—நார்மண்டியில் மூன்று நாட்கள் சுற்றுப் பிரயாணம் செய்துவிட்டு மிஸ்டர் சர்ச்சில் இன்று இங்கிலாந்திற்குத் திரும்பியதாகத் தெரிகிறது.

தூரக் கிழக்கு நாடுகள்.

ஜூலை 18.—மாரியானாவில் தமக்குக் கிடைத்த தோல்விபற்றி ஜெனரல் டோஜோ ஒரு அறிக்கை விடுத்தார்.

ஜெனரல் டோஜோவும் ஜப்பானிய கப்பற்படை மந்திரி அட்மிரல் ஷிகெடரோ ஷிமடாவும் தம் பதவிகளை ராஜினாமா செய்துவிட்டனர். ஜெனரல் யோஷிஜிரோ உமேசு முதன் மந்திரியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

ஜூலை 19.—ஜப்பானிய மந்திரி சபையே ராஜினாமாச் செய்து விட்டது.

ஜூலை 22.—ஜெனரல் குனியாகி காய்ஸோ முதன் மந்திரியாகவும், அட்மிரல் மிட்சுமஸா கப்பற்படை மந்திரியாகவும், மமோரு ஷிகெனிட்சு அந்நிய நாட்டு மந்திரியாகவும், பீல்ட் மார்ஷல் ஜெனரல் சுகியாமா யுத்த மந்திரியாகவும் புதிய ஜப்பானிய மந்திரி சபை யமைந்திருக்கிறது.

ஜூலை 23.—மௌண்ட் அலிபானை அமெரிக்கப் படைகள் கைப்பற்றின.

ஜூலை 24.—மாரியானாவைச் சேர்ந்த டினியன் தீவில் அமெரிக்கப் படைகள் வந்திறங்கின.

குவாமைச் சேர்ந்த கப்லாஸ், பிடி இவ்விரண்டும் கைப்பற்றப்பட்டன.

PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS AND PUBLISHED BY THE DIRECTOR OF WAR PUBLICITY, "VICTORY HOUSE", MOUNT ROAD, MADRAS.